# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர்: 11 இதழ்: 8 ஜூலை, 1959 விலை: சதம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப் படம்



இலங்கையிலே சரித்திரகாலத்துக்கு அப்பாற்பட்ட காலந் தொடக்கம் கதிர்காமக்கடவுள் வழிபாடு இருந்துவருகிறது. கதிர்காமத் தலத்துக்கு இந்துக்களும் பௌத்தர்களும் சென்று வழிபடுகின்றனர். இத்தலத்திலிருந்து செல்லக்கதிர்காமத்துக்குச் செல்லும் பாதையில் கால் மைல்தூரத்தில் ஒரு பௌத்த விகாரை சீரழிந்த நிலையிற் காணப்படுகிறது! இதனை இந்துக்கள் சூரன்கோட்டை என்றழைப்பர். ஆனால் இது உண்மையில் புராதன பௌத்த விகாரையாகும். புத்தர்பிரான் இலங்கைக்கு வந்தபோது, கதிர்காமக் காட்டில் கிஹிரி மரங்கள் நிறைந்த சோலையில், வீற்றிருந்து தர்மோபதேசஞ் செய்தார் எனப் பௌத்தர்கள் நம்புகின்றனர். எனவே இங்கு அமைக்கப்பெற்ற விகாரை, கிரிவிகாரை என்றழைக்கப்படுகிறது. இது மகாநாகன் எனும் இலங்கை மன்னனால் கி.மு. **104** ம் ஆண்டளவில் கட்டப்பெற்றதெனக் கருதப்படுகிறது. கிரிவிகாரையைப் புனருத்தாரணஞ் செய்யவேண்டுமென்ற வேணவா இலங்கைப் பௌத்தர்களிடையே ஏற்பட்டதன் காரணமாக கிரிவிகாரை புனருத்தாரணச்சபை என்றதோர் சபை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சபையின் முயற்சியால் புனருத்தாரண வேலைகள் சென்ற மாதம் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பௌத்தர்களின் புனித தலங்கள் பதினாறினுள் காசகமசைத்தியம் எனப்படுவது இந்த கிரிவிகாரையேயாகும். ருவான்வெலிசாய விகாரைக்கு முன்னரே கிரிவிகாரை கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய கிரிவிகாரை, புனருத்தாரணவேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் எவ்வித நிலையில் இருந்ததென்பதை அட்டைப்படம் எடுத்துக்காட்டுகின்றது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிம்மாசனப் பிரசங்கம் | 3 |
| 2. | கைத்தொழில் அபிவிருத்தி | 5 |
| 3. | வரவு செலவுத் திட்டப் பிரசங்கம் | 7 |
| 4. | தமிழ்நாட்டு வணிகர் | 9 |
| 5. | நாட்டுப் பாடல்கள் | 12 |
| 6. | கதிர்காம மூதூர் | 16 |
| 7. | கதிரை யாத்திரை | 18 |
| 8. | முத்துராஜவலைத் திட்டம் | 21 |
| 9. | பன்னிருமாசப் பெயர்கள் | 23 |
| 10. | வெற்றிலைச் செய்கை | 27 |


J. N. B 14651—5,509 (7/59)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 180



கடந்த ஜூன் மாதம் 30 ம் திகதியன்று மகா தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலக்கா அவர்கள் சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்துவதற்காகப் பாராளுமன்ற முன்றிலில் வந்திறங்கியபொழுது இராணுவப்படை அணிவகுத்து நின்று மரியாதை செலுத்தியது.

# சிம்மாசனப் பிரசங்கம்

## மேன்மைதங்கிய மகா தேசாதிபதி அவர்கள் 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் திகதியன்று மூன்றுவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தினை ஆரம்பித்துவைத்து நிகழ்த்திய பிரசங்கம்

*செனெற்று சபைத்தலைவர் அவர்களே! செனெற்று சபை அங்கத்தினர்களே! சபாநாயகர் அவர்களே! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே!*

இப்போதுள்ள அரசாங்கத்தின் ஆயுட்காலத்தில் நான்காவது ஆண்டினை இந்தக் கூட்டக்காலம் குறிக்கின்றது. எனவே இது இப்போதைய பாராளுமன்றம் நிறைவுறும் கடைசி வருடமாகும். இப்பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நிறைவுறும் இக்காலத்தில், ஏற்கெனவே பூரணமாக்கப்பட்ட திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுவதை நிச்சயப்படுத்துவதும், மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைப் பூரணப்படுத்துவதும் மிகவும் முக்யத்வம் வாய்ந்தனவும் அவசியமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து முடிக்கப்படவேண்டியனவுமாகக் கருதப்படும் புதிய திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதுமே பொதுவாகச் செய்யப்படவேண்டிய வேலைகள் என எனது அரசாங்கம் கருதுகிறது. கடும் அபிப்பிராய பேதங்களுக்கு இடமளிக்கும் நடவடிக்கைகளைக் கையாளாது தவிர்க்கவே எனது அரசாங்கம் முயன்று வரும்.

எனது அரசாங்கம் வல்லரசுக்கோஷ்டிகளுடன் சேராது, நடுவுநிலைமையுடன் சகவாழ்வு நடாத்தும் வெளிநாட்டுக் கொள்கையினை உறுதியுடன் கடைப்பிடித்து வருகின்றது. இக்கொள்கைக்கியைய, கடந்த கூட்டக்காலத்தில் எனது அரசாங்கம் ஆப்கானிஸ்தான், பெல்ஜியம், செக்கோசிலவாக்கியா, கிரீஸ், பிலிப்பைன் தீவுகள், போலந்து, உறுமேனியா, சுவிற்சர்லந்து, யுகோசிலேவியா ஆகிய நாடுகளுடன் இராஜ்யத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் இதர நாடுகளுடன் நட்புறவுகளை மேலும் பலப்படுத்திக் கொண்டுள்ளது.

இத்தாலி, சோவியத் யூனியன், ஆஸ்திரிய சமஷ்டி அரசாங்கம், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, போலந்து, யுகோசிலேவியா ஆகிய நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கைகளும் பிற உடன்படிக்கைகளும் செய்யப்பட்டுள்ளன.

சீனாவுடன் செய்து கொண்ட ஐந்துவருட அரிசி—றப்பர் உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கு முகமாக, இருநாடுகளுக்கும் திருப்தியளிக்கும் உடன்படிக்கையொன்று அடுத்த வருடத்துக்குச் செய்து கொள்ளப்பட்டது.

இலங்கையில் வசிக்கும் இந்திய வம்சாவழியினர் சம்பந்தமான பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்த்து வைக்கும் பொருட்டு, இவ்விஷயத்தை எனது பிரதம மந்திரி கவனத்துக்கு எடுத்துக் கொள்வார்.

அரசியல் திட்டத்தைத் திருத்தியமைப்பது பற்றிய விஷயங்களைக் கவனிக்கும்பொருட்டு நியமிக்கப்பட்ட செனெற்றுச் சபையினதும் பிரதிநிதிகள் சபையினதும் கூட்டுத் தெரிவுச் செயற்குழுவின் இடைக்கால அறிக்கையை மேற்கொள்ளு முகமாக, அரசியல் திட்டத்தில், குறிப்பிட்ட சில திருத்தங்கள், குறிப்பாக தேர்தல் தொகுதிகளை நிர்ணயித்தல் பற்றிய திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கூட்டுத் தெரிவுச் செயற்குழு தான் கவனிக்க வேண்டிய விஷயங்களில் அதிக முன்னேற்றமடைந்துள்ளது. இந்தக் குழு இப் பாராளுமன்றக் கூட்டக்காலத்தில் மீண்டும் நியமிக்கப்பட்டதும், தனது வேலை முழுவதையும் பூரணமாக முடித்துவிடும் என நம்பப்படுகிறது. மேலும் இக் கூட்டக் காலத்திலேயே அதன் சிபார்சுகளிற் சிலவற்றை அமுல்நடாத்துவது கூடச் சாத்தியமாகலாம்.

இலங்கை (பாராளுமன்றத் தெரிவு) இராசசபைக் கட்டளையினைத் திருத்துவதற்கான மசோதா நிறைவேறி அமுல் நடத்தப்பட்டு வருகிறது. அடுத்த பொதுத் தேர்தலின்போது எங்கள் நாட்டிலே சனநாயகம் மேலும் திறமையாக நடைபெறுவதை மேற்குறித்த நடவடிக்கைகள் நிச்சயப்படுத்தும்.

தேர்தல் தொகுதி நிர்ணயக் கொமிஷனின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சம்பள, பதவி நிர்ணயக் கொமிஷன், தேசிய சம்பள அமைப்புக் கொமிஷன், சாசன சங்கம் நிறுவுவதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நியமிக்கப்பட்ட கொமிஷன், இலங்கைக் கப்பற் போக்குவரவுச் சேவைக் கொமிஷன், பல்கலைக் கழகக் கொமிஷன் போன்ற முக்கிய கொமிஷன்களின் அறிக்கைகள் இந்தக் கூட்டக்காலத்தில் வெளி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அறிக்கைகளை எனது அரசாங்கம் காலம் தாழ்த்தாது அதிக சிரத்தையுடன் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளும். தேசியத்

(26 ம் பக்கம் பார்க்க)

**மகா தேசாதிபதி அவர்கள் சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்துகிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் அபிவிருத்தி

(திரு. ஜே. சி. முனசிங்க அவர்கள்)

குறுகிய காலமாகிய மூன்று வருடத்துள், கைத்தொழில், கடற்றொழில் அமைச்சு நாட்டிற் கிடைக்கும் வளத்தை இயன்றவரை பயன்படுத்தி கைத்தொழில் அபிவிருத்திக்கு முக்யத்துவம் அளித்து, சமநிலையான பொருளாதாரத்துக்கு அத்திவாரமிட்டுள்ளது.

நாட்டின் வளத்தைத் திறம்பட உபயோகிப்பதற்குகுத் திட்டம் வகுக்குமிடத்து, அபிவிருத்தி செய்யக்கூடிய கைத்தொழில்களை முப்பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன :—

(அ) அரசாங்கத்துக்குச் சொந்தமான பெரிய கைத்தொழில்கள்

(ஆ) தனியார் துறையாலும் அரசாங்கத்தாலும் ஒருமித்தோ தனித்தோ அபிவிருத்தி செய்யப்படவேண்டிய கைத் தொழில்கள்.

(இ) தனியார் துறையில் முற்றாக விடப்பட்ட சில கைத்தொழில்கள்

இலங்கையர் கைத் தொழில் முயற்சிகளில் முதலீடு செய்தல் கடந்த காலத்தில் மிகவரிதாகும். ஏனெனில் பணமுள்ளவர்கள் தமக்கு நிச்சயமாக வருவாயைத்தரும் விவசாயத் தோட்டங்களில் பணத்தை முதலீடு செய்ய விரும்பிவந்தார்கள்.

உள்ளூர் மூலதனத்தைக் கைத்தொழில் முயற்சிகளில் முதலீடுசெய்யுமாறு ஊக்கிவிடும்பொருட்டு, வருமான வரிச் சட்டத்தின் 7 (அ), 44(ஈ) பிரிவுகளின்படி சில வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டன.

முந்திய பிரிவின்படி, அரசாங்கம் ஆதரவளிக்கும் கைத்தொழில் ஆரம்பமாகி முதல் ஐந்து வருடகாலத்துக்கு வருமானவரி முற்றாக நீக்கப்பட்டுள்ளது. 44 (ஈ) பிரிவின்படி சில அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு வருமானவரிப் பிடியிலிருந்து பெருஞ் சலுகை அளிக்கப்படுகின்றது. அரசாங்கம் உத்தேசித்துள்ள புதிய வரிகளின்படி நாட்டின் வரியமைப்பில் முக்கியமாற்றங்கள் செய்யப்படும். இதனால் மக்களின் நலனுக்காக கைத்தொழில் வர்த்தக முயற்சிகளில் உள்ளூர் மூலதனம் பெருமளவில் முதலீடு செய்யப்படும் என எதிர்பார்க்கலாம். வெளி நாட்டு மூலதனம் கைத்தொழிலில் முதலீடு செய்யப்பட்ட விடத்தும் உள்நாட்டு மூலவளங்களையே உபயோகிக்க வேண்டியேற்படும். எனவே புதிய உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான கைத்தொழில்களை விருத்தி செய்வதில் அல்லது விசேஷ நுண் தொழிற் தேர்ச்சியும் அனுபவமும் தேவைப்படும் கைத்தொழில்களில் அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்ய முடியாதிருக்கின்ற கைத்தொழில்களில் மட்டும் வெளிநாட்டு மூலதனம் முதலீடு செய்யப்படலாம் என்ற கட்டுப்பாடு இருப்பது விரும்பத்தக்கதாகும்.

ஆதார கைத்தொழில்களை எவ்வாறு நிறுவி அபிவிருத்தி செய்வது என்பது பற்றிய வழிவகைகள் யாவும் 1957 ம் ஆண்டின் 49 ம் இலக்க அரசாங்க கைத்தொழிற் கூட்டுத் தாபனச் சட்டத்தில் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவை கோப்பரேஷன்கள் எனவும் அழைக்கப்படும். இந்தக் கோப்பரேஷன்களை அதிபதிகள் சபை நிர்வகித்துவரும். நாளாந்த வேலை நடைபெறுவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பு இந்தச் சபைக்குண்டு. அத்துடன் பொதுக் கட்டளைகளையும் விசேட கட்டளையும் இடும் அதிகாரம் மந்திரி அவர்களுக்குண்டு.

இப்போது பின்வரும் கைத்தொழில்களுக்காக அரசாங்கத் தொழிற் கோப்பரேஷன் சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட 12 கோப்பரேஷன்கள் அல்லது கூட்டுத்தாபனங்கள் உண்டு.

(1) எண்ணெயும் கொழுப்புகளும்.
(2) கடதாசி.
(3) மட்பாண்டங்கள்.
(4) ஒட்டுப்பலகை.
(5) தோல்.
(6) காரச் சோடாவும் குளோரினும்.
(7) சிமெந்து.
(8) புடவைகள்.
(9) சீனி.
(10) உப்பும் உபபொருட்களும்.
(11) இல்மனைற்.
(12) தச்சுவேலை.

ஏற்கெனவே நிறுவப்பட்டுச் சிறிதுகாலம் நடைபெற்றுவரும் மேற்கூறிய தொழிற்சாலைகளிற் சில கடந்த இரண்டு வருடகாலத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி அடைந்துள்ளன. இறக்குமதி செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் பொருட்களின் அளவைக் குறைத்துக்கொள்ளும் பொருட்டு, இந்தக் கைத்தொழில்களிற் சிலவற்றின் விஷயத்தில் விஸ்தரிப்புத் திட்டமொன்றை நடைமுறைக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனுல் உள்நாட்டிலுள்ளவர்கள் தொழில் நுட்பத் தேர்ச்சிபெறுவதற்கும் சந்தர்ப்பங்கிடைக்கும்.

சீமெந்து, மட்பாண்டங்கள், ஓட்டுப் பலகை, தோற்பொருட்கள் ஆகியவை உற்பத்திசெய்யப்படும். தொழிற்சாலைகளில் விஸ்தரிப்புத் திட்டங்களைக் கையாள உத்தேசிக்கப்பட்டது. வருடமொன்றுக்கு **200,000** தொன் சீமெந்து உற்பத்தி செய்யக்கூடியதாகக் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை விஸ்தரிக்கப்படும். மேலும் **125,000** தொன் சீமெந்து உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாவது சீமெந்து தொழிற்சாலையை புத்தளத்தில் நிறுவ நான் உத்தேசித்திருக்கிறேன்.

உள்ளூர் நெசவுத் தொழிலுக்குத் தேவையான நூலை நூற்கக்கூடிய பருத்தி நூல் ஆலையொன்றை நிறுவவே முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனுல் இப்பொழுது ஒரு கோடி யார் நூல் தயாரிக்கும், நூல் நெசவுத் தொழிற்சாலையொன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. **1959–60** ம் ஆண்டுக்குரிய திட்டத்தில் அநேக புதிய தொழிற்சாலைகளை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒன்றரைக் கோடி யார் நூல் நூற்கக்கூடிய இரண்டாவது நூல், நெசவுத் தொழிற்சாலை, இலங்கை தற்போது உபயோகிக்கும் சீனியில் மூன்றிலொருபங்கினை அதாவது **60,000** தொன் சீனியை உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாவது சீனித் தொழிற்சாலை, ஒவ்வொன்றும் **60** லட்சம் ஓடுகளும் **620,000** செங்கற்களும் உற்பத்தி செய்யக்கூடிய மூன்று ஓட்டுத் தொழிற்சாலைகள், உள்ளூர் மருந்துகளைத் தயாரிக்கும் ஆயுர்வேத மருந்து தயாரிப்புச்சாலை ஆகியன நிறுவப்படும்.

பசளை உற்பத்தி, இரும்பு, உருக்கு உற்பத்தி, ரயர் உற்பத்தி ஆகிய ஆதார கைத்தொழில்களைத் தாபிப்பதில் எனது அமைச்சு அதிக கவனஞ்செலுத்தி வருகின்றது. மேற்கூறிப்பட்ட கைத்தொழில்களின் கடைசியாகக் குறிக்கப்பட்ட இரு கைத்தொழில்களுக்கும் சோவியத் யூனியன் உதவியளிக்கும். இதற்குரிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

அண்மையில் வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டதன் பயனாக, தனியார் துறையிலிருந்து போதிய ஆதரவு கிடைத்துவருகின்றது. இது ஊக்கமளிக்கும் நிகழ்ச்சியாகும். தனிப்பட்டவர்களும், அரசாங்கமும் ஒருங்கு சேர்ந்து மூலதனமிட்டு அநேக கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டவற்றுள் ஈரமில் மின்னடக்கி, சைக்கிள், அஸ்பெஸ்ரொஸ் கம்பனிகளையும் நாவாய்கட்டும் தாபனத்தையும் குறிப்பிடலாம். வெளிநாட்டு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சில தொழிற்சாலைகளுமுண்டு. மெஸ்ஸர்ஸ் டுமக்ஸ், கிளாக்ஸோ தொழிற்சாலை ஆகியவை இவ்வாறு வெளிநாட்டு மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை மருந்து செய்யும் துறையில் ஈடுபட்டுள்ளன. பன்றியிறைச்சி வற்றல், உப்பிட்ட பன்றித் தொடை, மசாலையிட்ட இறைச்சி, ஆகியவற்றைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலையைக் கடந்த இரண்டு வருடகாலமாக டென்மார்க் டான்லூட் கம்பெனி நடத்தி வருகிறது. நாடு முழுவதிலும், கைத்தொழில் தோட்டங்களை நிறுவுவதுபற்றிய திட்டமொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் முதலாவது கைத் தொழில் தோட்டம் ஜாஎலைக் கண்மையில் நிறுவப்படும். அரசாங்கம் பங்கு பற்றும் பொதுக் கொம்பனியிடம் இந்தத் தோட்டத்தின் நிர்வாகம் ஒப்படைக்கப்படும்.

மீன் விஷயத்திலும், சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கான திட்டமொன்றை எனது அமைச்சு வகுத்துள்ளது. இயந்திர சாதனங்களைக் கொண்டு மீன் பிடிக்கவும், மீன் பிடிப்பதில் நவீன முறைகளைக் கையாளுவதுமே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். நன்னீர், உவர்நீர் மீன்பிடித்தலிலும் கவனஞ் செலுத்தப்படும். மீன் வளர்ப்பை அபிவிருத்தி செய்வதிலும் ஊக்கம் காட்டப்படும். மீனைச் சந்தைப் படுத்தல் சம்பந்தமாக இப்போதுள்ள முறைகளைத் திருத்தியமைத்தல், இக்காலத்துக்கேற்ற நவீன விற்பனை நிலையங்கள் அமைத்தல், துறைமுகங்களைக் கட்டுதல், குளிரூட்டும் அறை வசதிகளை ஏற்படுத்தல் முதலியவற்றைச் செய்வதற்கும் இத்திட்டம் இடமளிக்கும்.

அரசாங்கம் ஆலோசனை செய்து வரும் இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுமிடத்து, **10** வருடகாலத்துள் மீன் விஷயமாகச் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனுல் வெளிநாடுகளிலிருந்து மீனும் மீனிலிருந்து தயாரிக்கப்பட்ட பொருட்களும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதை ஒழித்துவிடலாம். இப்பொழுது இவற்றிற்காக வருடந் தோறும் இலங்கையிலிருந்து **8** கோடி ரூபா வரை வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...priate Technology Services
121, POINT-P... C ROAD
NALLUR, JAFFNA
No.........



# வரவு செலவுத் திட்டப் பிரசங்கம்

## புதிய வரிகள் பற்றிய விளக்கம்

நிதியமைச்சர் திரு. ஸ்டான்லி டி சொய்சா அவர்கள் ஜூலை மாதம் 9ந் தேதியன்று 1959—60ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

தமது வரவுசெலவுத் திட்டப் பிரசங்கத்தில் நிதியமைச்சர் சென்ற ஆண்டின் வரவுசெலவுத் திட்டம் அமுல் நடத்தப்பட்ட விதத்தைப்பற்றி விரிவாக விமர்சனம் செய்தார். அத்துடன் இன்றைய இலங்கையின் பொருளாதார நிலைமைபற்றியும் விளக்கினர்.

தேயிலை உற்பத்தி 4,130 லட்ச ருத்தலாக அதிகரித்ததென்றும் ரப்பர் உற்பத்தி 2,240 லட்சம் ருத்தலாக அதிகரித்ததென்றும் அவர் சுட்டிக்காட்டினர். இதன் பிரகாரம் தேயிலை உற்பத்தி 150 லட்சம் ருத்தலாக அதிகரித்துள்ளது; ரப்பர் உற்பத்தி 50 லட்சத்தால் அதிகரித்துள்ளது.

தெங்குற்பத்தி மட்டுமே வரட்சி நிலைமைகளால் சிறிது குறைவுற்றது.

எனினும் பொதுவாக இம்மூன்று முக்கிய பொருட்களின் மூலமும் கிடைத்த கூட்டுவருமானம் ரூபா 80 லட்சத்தால் அதிகரித்திருக்கிறதென்று நிதியமைச்சர் எடுத்துரைத்தார்.

இறக்குமதித்துறையில் 1958ல் மொத்த இறக்குமதிகளின் பெறுமதி குறைவுற்றதையும் அவர் சுட்டிக்காட்டினர். இறக்குமதிகளின் பெறுமதி குறைவுற்றதற்கு சில முக்கிய இறக்குமதிப் பொருட்களின் பெறுமதி குறைவுற்றதே காரணமென்றும், இறக்குமதிகளின் அளவு சற்று அதிகரிக்கவேசெய்ததென்றும் அவர் குறிப்பிட்டார்.

விலைவாசிகள், சம்பள நிலைமைகள் போன்ற பிரச்சினைகள் பற்றியும் நிதிமந்திரி விபரித்தார்.

நுகர்வு விலைவாசிகள் பற்றிக் குறிப்பிடுகையில் 102.8 ஆக இருந்த விலை வாசிப் புள்ளி 1958ல் 105 ஆக அதிகரித்ததென்று அவர் எடுத்துக்காட்டினர்.

சம்பளங்கள் பொதுவாக அதிகரித்து வந்தனவென்றும் இதுபற்றிய புள்ளி 101.5 இலிருந்து 110.9 ஆக அதிகரித்ததென்றும் நிதியமைச்சர் கூறினர். அரசாங்கத்தில் வேலை செய்யும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சம்பளங்களே அதிகமாக உயர்ந்ததென்றும் அவர் தெரிவித்தார். இவர்களது சம்பளம் 107.3 சத விகிதத்திலிருந்து 120.7 சத விகிதமாக அதிகரித்தது.

தாபன ரீதியாகத் திரண்டிருக்கும் தொழிலாளர் தமது சம்பளத்தை உயர்த்துதற்காக அடிக்கடி அரசாங்கத்தை நெருக்குவது தமக்குக் கவலையளிப்பதாகவும் நிதியமைச்சர் கூறினர்.

நிதியமைச்சர் அவர்கள் தமது வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்தில் 10 வருட அபிவிருத்தித் திட்டத்தைப்பற்றியும் பிரஸ்தாபித்தார். தேசிய திட்டமிடும் சபையின் இத்திட்டத்தைச் சபை முன்னர் சமர்ப்பித்து நாட்டினர் யாவரும் அதை நன்கு பரிசீலிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

## புதிய வரிகள்

புதிய வரிகளைப் புகுத்தல்பற்றி நிதியமைச்சர் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்:—

புதிய வரிகளின் மூலம் 320 லட்சம் ரூபா வருமானம் அதிகரிக்கும். ஆனல் இவ்வரிகள் வரி வருமானத்தை அதிகரிப்பதற்காக மட்டும் புகுத்தப்படவில்லை. நாட்டின் கைத்தொழிலபிவிருத்தியை முன்னிட்டு உள்நாட்டில் நடைபெறும் கைத்தொழில்களின் பாதுகாப்புக்காக நாம் சில பல நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு உபயோகிக்கப்படும் பல பொருட்களின் வரிகளைக் குறைக்க நான் உத்தேசித்துள்ளேன். இன்னும் உள்நாட்டுப் பொருட்களோடு போட்டியிடும் இறக்குமதிப் பொருட்களின் வரிகளை உயர்த்துதற்கும் நான் உத்தேசித்துள்ளேன்.

சமீப காலத்தில் உள்நாட்டுக் கைத்தொழில்கள் வேகமாக அதிகரித்து வருதல் சந்தோஷமளிப்பதாயுள்ளது. அவற்றை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது.

நமது சிறிய கைத்தொழில்களை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுப்பதில் நான் மகிழ்ச்சியடை'றேன். இன்று இங்கு தயாரிக்கப்படும் மின்சார பாட்டரிகள் உயர்ந்த ரகத்தை யுடையனவாக இருக்கின்றன. ஆகவே இவற்றைத் தயாரிக்க வரவழைக்கப்படும் பொருட்களின் மீதுள்ள வரியை மிகவும் குறைவாக்குதற்கு நான் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்திருக்கிறேன். கண்ணுடி யுற்பத்திக்கு வேண்டிய சோ..ாச் சாம்பல், பீங்கானுற்பத்திக்கு வேண்டிய மூல' பொருட்கள் என்பவற்றின் மீதுள்ள வரிகளும் மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்கப்படும். உள்நாட்டிலுள்ளோர் புதிய துறைகளில் ஈடுபடுதல் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். பல்துலக்கும் பசைகளும் பல்துலக்கிகளும் இலங்கையில் இப்பொழுது செய்யப்படுகின்றன. நைலன் தும்பு, அலுமினியம் டியூப்புகள் என்பன இவற்றிற்கு உபயோகிக்கப்படுகின்றன. இவற்றின் வரியும் மிகவும் குறைக்கப்படும். கியாஸ் விளக்குகளுக்குப் பாவிக்கப்படும் மான்டில் திரிகளின் வரிகளும் குறைக்கப்படுகின்றன.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பனியன்களுக்குச் சமமான பனியன்கள் இப்பொழுது இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் பனியன்களின் மீதுள்ள வரி அதிகரிக்கப்பட இருக்கிறது.

சென்ற ஆண்டு விலை உயர்ந்த கார்களின் மீதுள்ள வரிகள் அதிகரிக்கப்பட்டன. இருப்பினும் இன்னும் பெருந்தொகைப் பணம் நாட்டில் கார்களுக்காகச் செலவிடப்படுகின்றது. இன்றைய வாழ்க்கை முறையில் பொதுசன போக்குவரத்து முறைகள் போதிய அளவு வளர்ச்சியடையும் வரை தனிப்பட்ட வாகனங்கள் மிகவும் அவசியமானவையாகவே விளங்குகின்றன. ஆயினும், இத்துறையில் அதிக ஆடம்பரமாகச் செலவு செய்தற்குப் போதிய காரணங்கள் இல்லை. ஆகவே ஆடம்பரமான கார்களின் மீதுள்ள வரியை நான் அதிகரிக்க உத்தேசித்திருக்கிறேன். ஆயினும் இறக்குமதி விலை 8,000 ரூபாவுக்குக் குறைவாகவுள்ள கார்களின் மீதுள்ள வரிகள் அதிகரிக்கப்படமாட்டாது. இச்சிறு கார் நடுத்தர நிலையிலுள்ள சாதாரண மனிதனின் குடும்பக் காராகும். இன்னும் இக்காரைத் தமக்குச் சொந்தமாகவுடைய பலர் அவற்றை வாடகைக்கு விட்டுச் சீவிக்கின்றனர். 8,000 ரூபாவுக்கும் 10,000 ரூபாவுக்கு மிடையில் இறக்குமதி விலை கொண்ட கார்களின் வரி 5 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டது. 10,000 ரூபாவுக்கும் 12,000 ரூபாவுக்கும் இடைப்பட்ட இறக்குமதி விலை கொண்ட கார்கள் மீது 10 சதவிகிதம் வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ரூபா 12,000 த்திற்கு அதிகமான இறக்குமதி விலைகொண்ட கார்கள் மீதுள்ள வரி 25 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுயர்வு பொதுவாக ரூபா 15,000 விலைக்குப் பொதுசனங்களால் வாங்கப்படும் கார்களையே பெரிதும் பாதிக்கும். ஆனால் இந்த உயர்வுகளால் மட்டுமே அன்னிய நாணயங்களை நாம் இழப்பதைத் தடுத்துவிட முடியாது. 1958 ல் நாம் நமது அன்னிய நாணயங்களிலிருந்து 360 லட்சம் ரூபாவை கார்களுக்காகச் செலவிட்டோம். பெட்ரோலுக்கு ரூபா 240 லட்சம் இவ்விதம் செலவிடப்பட்டது.

ஆகவே பெட்ரோலின் வரியை கலன் ஒன்றுக்கு 10 சதவீதம் உயர்த்த உத்தேசித்திருக்கிறேன். ஆனால் இதன் காரணமாக பஸ் கட்டணங்கள் அதிகரிக்காது. ஏனெனில் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு பெட்ரோல் விலைக் கழிவு கொடுக்கப்படுகிறது. ரூபா 55 லட்சம் கார் வரிகள் மூலமும் பெட்ரோல் வரி மூலமும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கைக்கடிகார இறக்குமதிக்கு 1956 ல் 47 லட்சம் ரூபா செலவிடப்பட்டது. 1957 ல் இது 77 லட்சமாகி 1958 ல் 110 லட்சம் ரூபா ஆகிவிட்டது. 1956 ல் 158,000 கைக்கடிகாரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 1957 ல் இது 244,000 ஆகியது. 1958 ல் இது 342,000 ஆகிவிட்டது. இந்தக் கடிகாரங்களில் பல வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாக அனுப்பப்படுகின்றன என்று எண்ணுதற்கு இடமிருக்கிறது. இதனால் கைக்கடிகாரங்களின் மீதுள்ள வரியையும் அதிகரிக்க உத்தேசித்திருக்கிறேன். ஆனால் ஏழைகள் உபயோகிக்கும் கைக்கடிகாரங்களின் விலை அதிகம் அதிகரிக்கப்படமாட்டாது. இறக்குமதி விலை ரூபா நூறாக இருக்கும் கைக்கடிகாரங்களின் மீது 30 சதவீத வரியும் 40 சதவீத வரியும் வசூலிக்கப்படும். அடுத்த ரூபா நூறுக்கு 50 சதவீத வரியும் 60 சதவீத வரியும் வசூலிக்கப்படும். ரூபா 200 க்கு அதிகமான இறக்குமதி வரிகொண்ட கைக்கடிகாரங்களின் மீது 100 சதவீத வரியும் 110 சதவீத வரியும் வசூலிக்கப்படும். மலிந்த விலையுள்ள கைக்கடிகாரத்தின் விலை மூன்று ரூபாயால் அதிகரிக்கலாம். இது ஒரு பெரிய தொகை எனச் சொல்ல முடியாது. ஆனால் இவ்வரிகளால் விலையுயர்ந்த கைக்கடிகாரங்களின் இறக்குமதி குறையும். பொதுவாக இவ்வரிகளால் 10 லட்சம் ரூபா அரசிறை அதிகரிக்கும் என்று அனுமானிக்கப்படுகிறது. விலையுயர்ந்த கடிகாரங்களோ சட்ட விரோதமாகக் கடத்தப்படுபவையாகும். ஆகவே இவ்வரிகளின் பயனாக நமது நாட்டில் நாம் உபயோகிக்காத கைக்கடிகாரங்களுக்காக எமது அன்னிய நாணயங்கள் உபயோகிக்கப்படுதலும் குறிப்பிடத்தக்க அளவு குறைவுறும்.

அரசாங்க வடிசாலைகளிலிருந்து விற்கப்படும் சாராயப் போத்தலின் விலையும் ரூபா 2 ஆல் அதிகரிக்கப்பட வேண்டுமென நான் தீர்மானித்துள்ளேன். இதன் பயனாக 170 லட்சம் ரூபா அரசிறை அதிகரிக்கும். இறக்குமதி செய்யப்படும் குடிவகைகளின் விலையும் ரூபா 3 ஆல் அதிகரிக்கும். இதன் பயனாக இன்னும் ஒரு 5 லட்சம் ரூபா அரசிறை வருமானம் அதிகரிக்கும்.

தெங்குப் பொருட்களுக்கு இப்பொழுது நல்ல மார்க்கட் இருந்துவருகிறது. இதன் ஏற்றுமதி வரி

(30 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டு வணிகர்

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

ஒரு நாட்டின் நாகரிகத்துக்கு முதற்காரணமா யிருப்பது அதன் செல்வமிகுதியாகும். செல்வ வளர்ச்சிக்குத் துணை புரிவனவற்றுள் தலைசிறந் தது வியாபாரம்; ஆகலின் வாணிகமே ஒரு நாட்டு நாகரிகத்தின் சிறப்புக்குப் பெரிதும் உதவியாயிருப் பதாகக் கருதப்படுகின்றது.

ஆதிகாலந் தொடங்கி மக்கள் மேற்கொண்டு செய் துவரும் ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு கடமை யாகவே கருதப்பட்டு வந்திருக்கின்றது. சரீரத்தின் அங்கங்களெல்லாம் வேலை செய்வதனுற் சரீரம் எப்படிப் பாதுகாக்கப்படுகிறதோ அப்படியே தேசத் தின் க்ஷேமத்திற்குப் பல தொழில்களும் உதவு கின்றன. ஒவ்வொரு தொழிலும் அதனைச் செய் பவர்களுக்குப் பயனளித்து வந்தாலும் பரோபகார மாகவே யிருப்பதால் சிறந்த தருமமாகவும் எண் ணப்படும்.

நாகரீகம் மிக்க மேனுடுகள் வியாபாரத்திற் சிற ந்த நிலையை உடையனவாக இருக்கின்றன. நம் முடைய தமிழ்நாடு முற்காலத்தில் வியாபாரத்தி லும் பிறவற்றிலும் உயர்நிலையை அடைந்து இருந் தது. இதனைப் பழைய தமிழ் நூல்களால் நாம் அறியலாம். தொழில்களிற் சிறந்தனவாகச் சொல் லப்படுவன உழவும் வாணிகமுமாகிய இரண்டுமே யாம். ஒருவர் பிறருக்கு அடிமைப்படாது உரிமை யோடு செய்யும் இவ்விரண்டும் பல நூல்களிற் சிறப்பித்துப் பாராட்டப்படுகின்றன. வேளாண்மை யினுல் விளைவிக்கப்படும் பொருள்களும் கைத்தொழில் களால் உண்டாக்கப்படும் பொருள்களும் பல நாட் டாரும் பெறும்படி செய்வித்தலில் வாணிகம் உதவு கின்றது. மனிதனுடைய வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் யாவும் ஓரிடத்திலேயே கிடைத்தல் அரிது ஆதலின், பல்வேறு இடங்களில் உண்டாக்கப்படும் பலவேறுவகைப் பொருள்களை மனிதர்களுக்குப் பய ன்பெறச் செய்யும் முயற்சியே வாணிகமாகும்.

இந்த வாணிகத்தினுலேயே வடமலையிற் பிறந்த பொன்னும் தென்மலையிற் பிறந்த சந்தனமும் குடகடற் பவளமும் தென்கடல் முத்தும் ஒருங்கே மனிதராற் பெறப்படும் நிலையில் சேருகின்றன.

வாணிகத்தைப் பரம்பரையாகச் செய்துவரும் மர பினர் வணிகர். வைசியரெனப்படுவார். அவர் களிற் பலவகையினர் உண்டு. தனவைசியர், கோவை சியர், பூவைசியர் என்பார் ஒருவகைப் பிரிவினர். இப்பர், கவிப்பர், பெருங்குடி வாணிகரென்பார் மற் றொரு வகைப் பிரிவினர். இப்பிரிவினர் தாம் கொண்ட பொருளளவாற் பெயர் பெற்றனர். தாம் செய்யும் வியாபாரத்தாற் பிரிக்கப்பட்ட கூலவாணி கர், பொன்வாணிகர், அறுவை வாணிகர், மணி வாணிகர் முதலிய பிரிவினரும் உண்டு. சேனை வாணிகர் என்பவரைப் போன்ற உத்தியோகப் பிரி வினரும் உண்டு.

தமக்குரிய நூல்களை ஓதுதல், தமக்குரிய யாகங் களைச் செய்தல், தாம் பெற்ற பொருள்களை நல் வழியில் ஈதல், உழவு செய்வித்தல், பசுக்களை காத்தலென்னும் ஐந்தும் வணிகருக்குரிய தொழில் களென்று தொல்காப்பியத்துட் கூறப்பட்டிருக்கிறது. அவர் அரசர்களால் பெரிதும் மதித்துப் பாராட்டப் பெற்றனர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனென் னும் சேர அரசன், தன்நாடு காத்து வரும் சிறப் பைப் புகழ்ந்து பாடிய குமட்டூர்க் கண்ணனுரென் னும் புலவரொருவர் ஒரு பாட்டில், "உன்னுடைய நாடு நோயும் பசியும் இல்லாமல் விளங்கும்படி நீ காத்து வருகின்றுய்" என்னும் பொழுது அவன் காக்கும் முறையை விரித்துச் சொல்லுகி ருர்; "பல வகை உணவுப் பண்டங்களை விற்கும் வணிகருடைய குடிகளைக் காப்பாற்றி வருகின்றுய்" என்னும் கருத்தை அமைத்து,

"கூலம் பகர்நர் குடிபுறந் தராசு"

என்று கூறியிருக்கின்ருர். இதனுல் ஒரு நாட்டின் இன்ப வாழ்க்கைக்கு வணிகரைப் பாதுகாத்தல் இன் றியமையாததென்பதும் அங்ஙனம் செய்தல் அரசன் கடமைகளில் ஒன்றென்பதும் தெரியவருகின்றன.

தமிழரசர்கள் தங்களுக்குள் போர் நேர்ந்த காலங் களில் தூதாக அனுப்புவதற்கு உரியவர்களுள் வணி கரும் ஒரு வகையினர். அரசர்களது நிலையை உணர்ந்து சினமின்றித் தாம் கூறுவதைச் சுருங் கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலுடைமை யால் அவர் அத்தொழிலுக்கு உரியராயினர். பண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களை விற்கும்போது கூடச் சுருங்கப் பேசி விளங்க வைக்கும் இயல்புடையவர்கள் அவர்கள், இதனை,

**" புல்லியோர் பண்டங் கொள்வார்**
**வினவின் அப்பொருள்தம் பக்கல்**
**இல்லெனின் இனமாயுள்ள**
**பொருளுரைத் தெதிர்மறுத்தும்**
**அல்லதப் பொருளுண் டென்னின்**
**விலைசுட்டி யறுத்து நோக்குஞ்**
**சொல்லினும் இலாபங் கொள்வார்**
**தொன்மர பிருக்கை சொல்வாம் "**

**(திருவிளையாடற் புராணம்)**

என்னும் செய்யுளால் அறியலாம். அரசர்களும் வணிகர்களும் கலந்து பழகினார்கள். அதனால் வணிகர்கள் இளங்கோக்களெனக் கூறப்படுவார்கள். காவிரிப்பூம் பட்டினத்து வீதியில், " அரசகுமாரரும் வணிக குமாரரும் குதிரைகளின் மேலும் களிற்றின் மேலும் ஏறி ஒருங்கே சென்றனர். (சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை 158-60) என்று சொல்லப்பட்ட பகுதியால் அரசருக்கும் வணிகருக்கும் இருந்த நட்பு விளங்குகின்றது. அரசர்களால் அவர்கள் பலவகையான சிறப்புக்களைப் பெற்றார்கள். எட்டி யென்னும் பட்டமும் அதற்குரியதாகிய பொற்பூவொன்றும் அவர்களுக்கு அளிக்கப் பெற்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி குண்டலகேசி முதலிய நூல்களில் வணிகரைப் பற்றிய பல செய்திகள் காணப்படும்.

வணிகர், தம் தொழிலை அறநெறி தவறாமல் செய்துவந்தார்கள். பிறர்பால் பெறும் பொருளை மிகுதியாகப் பெறாமலும், தாம் அளிக்கும் பொருளைக் குறைவாகக் கொடாமலும் இலாபத்தை வெளிப்படச் சொல்லி விற்றுவந்தனர். பிறர் பொருளையும் தம்முடையன போற் கருதிப் பிறருக்குத் துன்பம் வராமற் பாதுகாத்து வந்தனர்.

காவிரிப்பூம் பட்டினத்திலும் மதுரையிலும் வணிகர்கள் மிகுதியாக இருந்தனர். அவ்விரு நகரிலும் நாளங்காடி என்னும் காலைக் கடைத்தெருவும் அல்லங்காடி என்னும் மாலைக் கடைத்தெருவும் இருந்தன. இவற்றிற் பண்டம் விற்போர் தம்மிடம் உள்ள பண்டங்கள் இன்னவென்பதைக் காட்டுவதற்கு அறிகுறியாகச் சிலவகைக் கொடிகளை நாட்டி வைப்பர். இரவிற் கொடியினால் புலப்படுத்த இயலாதாகையால் பலவகை விளக்குகளால் அதனைப் புலப்படுத்தினார்கள். இச்செய்திகள் சிலப்பதிகாரத்தாலும் பட்டினப்பாலையாலும் விளங்கும். இவ்வழக்கங்கள் இக்காலத்தில், புகை வண்டிகளுக்குக் காட்டும் குறிகளாகப் பகலிற் கொடிகளையும் இரவில் விளக்குகளையும் உபயோகிப்பதைப் போன்றனவாகத் தோன்றுகின்றன.

காவிரிப்பூம் பட்டினத்திற் பட்டினப்பாக்கம் என்றும் மருவூர்ப் பாக்கம் என்றும் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. அவற்றுள் பட்டினப்பாக்கமென்பது கடற்கரையை அடுத்த இடம். அங்கே பெரும்பாலும் வணிகர்களே வசித்தார்கள் ; சுங்கச்சாலை இருந்தது ; கலங்கரை விளக்கமும் இருந்தது. " தாழை நிறைந்த தெருக்களில் அரசனுக்குரிய பொருள்களைக் காக்கும் காவலர்கள் ஒவ்வொரு நாளும் சலிப்பின்றிச் சுங்கங் கொள்வார்கள். கப்பலிலிருந்து நிலத்தில் இறக்கப்படுவனவும், நிலத்திலிருந்து கப்பலில் ஏற்றப்படுவனவுமாகிய அளவில்லாத பண்டங்கள் முன்றிலில் மலைபோலக் கிடக்கும். மாடங்களில் உள்ள மகளிர்கள் கைகளைக் கூப்பி, வெறியாடும் மகளிரோடு பொருந்தி வேய்ங்குழல் முதலியவற்றை வாசிக்க விழாக்கொண்ட ஆவணத்தையுடையது அப்பட்டினம். தெய்வத்திற்காக எடுத்த கொடிகளும், விலைப் பண்டங்களை அறிவித்தற்குக் கட்டிய கொடிகளும், ஆசிரியர்கள் வாதுகருதிவைத்த கொடிகளும், கப்பலின் கூம்பிலுள்ள கொடிகளும் பிறவும் நகர்ப் பக்கத்தில் விரவியிருக்கும். அங்கே கடல் வழியே வந்த குதிரைகளும், நிலத்தின் வழியே வந்த மிளகு பொதிகளும், இமயத்திலுண்டான மணிகளும், பொன்னும், குடகுமலையிற் பிறந்த சந்தனமும் அகிலும், கொற்கைத்துறையிற் பிறந்த முத்தும், கீழ்கடலின் உண்டான பவளமும், கங்கையில் உண்டான பொருள்களும் காவிரியில் உண்டான வளங்களும், ஈழநாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், காழக நாட்டுப் பொருள்களும், பிற அரிய பொருள்களும், வளம் மிகுந்த பரந்த இடத்தையுடைய தெருக்களும் உள்ளன. பின்னும் அப்பட்டினம் வணிகர் நெருங்கியிருக்கும் இருப்பிடங்கள் பலவற்றை உடையது. அவ்வணிகர்கள் வலைஞருடைய மனைகளின் முன்னே நீரில் மீன்கள் அச்சமற்றுத் திரியவும் அச்சாதியாரிடமிருந்து கொலையை நீக்குவார்கள் ; கள்வரிடமிருந்து களவுத் தன்மையைப் போக்குவார்கள் ; தேவர்களுக்கு ஆகுதிகளைக் கொடுத்து வழிபடுவார்கள் ; பசுக்களையும் எருதுகளையும் பாதுகாப்பார்கள் ; உணவையும் பிறவற்றையும் உரியார்க்கு அளித்து நுகத்தடியிலுள்ள பகலாணிபோல நடுவு நிலைமையையுடைய நெஞ்சினராய் உண்மையைக் கூறித் தம் பொருள்களையும் பிறர் பொருள்களையும் ஒப்ப நினைந்து, கொடுக்கும் பண்டத்தின் மதிப்பிற்கு அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் பொருளைக் கொள்ளாமலும் கொள்ளும் பொருளுக்குக் குறையப் பண்டங்களைக் கொடாமலும் பல பண்டங்களை இலாபத்தை வெளியாகச் சொல்லி விற்பார்கள் " என்று பட்டினப்பாலையில் அவர்களைப் பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

ஊனுண்போர் இயல்பையும் களவு செய்வோர் இயல்பையும் மாற்றும் திறமை அவர்கள்பால் இருந்தமை அவர்களுடைய சிறந்த தன்மையை விளக்குகின்றது. நல்லுரையினாலும் அறச் செயலானுலுமே அத்தகைய செயல்களை அவர்கள் செய்து வந்தார்கள். அவர்களது ஈகைச் சிறப்பைப் பாராட்டி ஒரு பழைய செய்யுள்,

**" ஈட்டிய தெல்லாம் இதன்பொருட் டென்பதே**
**காட்டிய கைவண்மை காட்டினார்—வேட்டொறும்**
**காமருதார்ச் சென்னி கடல்சூழ் புகார்வணிகர்**
**தாமரையும் சங்கும் போல் தந்து "**

என்று கூறுகிறது ; (சோழ அரசனுக்குரிய காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள வணிகர்கள் பதுமநிதியையும் சங்கநிதியையும்போலப் பொருள்களை வழங்கி, தாம் ஈட்டிய செல்வமெல்லாம் அறம் புரிவதற்கேயாமென்பதை விளக்கும் கொடைத் திறத்தைக் காட்டினார்கள் என்பது இதன் கருத்து. ஆலயத் திருப்பணி முதலியவைகளிலும் வித்தியா தருமங்களிலும் இக்காலத்தில் ஒப்புற்று விளங்கும் தன வணிகர்களுடைய கைவண்மைக்கும் இச்செய்யுள் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

தமிழ்நாட்டு வணிகர்கள் பிற நாட்டாரோடும் வாணிகம் புரிந்து வந்தனர். பிறநாட்டு வணிகர்கள் இந்நாட்டுக்கு வந்து பல பண்டங்களைப் பெற்றுச் சென்றார்கள். தமிழ் நாட்டு வணிகர்கள் ஈழம், காழகம், கடாரம் (பர்மா), சீனம், சோனகம், யவனம் முதலிய நாட்டு வணிகர்களுடன் வியாபாரம் செய்தனர். கப்பல் வியாபாரம் மலிந்திருந்தது. யானைகளும் கப்பல்களில் வந்து இறங்கின. உள் நாட்டில் வியாபாரம் செய்யச் செல்லும் வணிகர், கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். அக்கூட்டத்துக்குச் சாத்து என்று பெயர். வணிகர்களுள் சாத்தன், சாத்தப்பன் என வழங்கும் பெயர்கள் பழைய காலத்தில் சாத்துக்குத் தலைவனாக இருந்தவர்களது பெயரிலிருந்து வந்தனவாகத் தோற்றுகின்றன. வேறு நாட்டுக்குச் செல்ல விரும்பியவர்கள் அந்த வணிகர் கூட்டத்தையே துணையாகக் கொண்டு சென்று வந்தார்கள்.

பலநாட்டு வணிகர்களோடு பழகுவதனாலும் பல நாடுகளுக்குச் சென்று வருதலாலும் அவர்களுக்கும் பல தேசத்து மொழிகள் தெரிந்திருந்தன. மணிமேகலையில், சாதுவனென்னும் வணிகன் ஒருவனுக்கு நாக சாதியினருடைய பாஷை தெரிந்திருந்ததென்றும், தன்னைக் கொல்ல வந்த நாகர்களிடம் அவன் அப்பாஷையிற் பேசி அவர்களாற் போற்றப்பட்டானென்றும் ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. பல தேச சஞ்சாரத்தால் அவர்கள் உலக அனுபவமும் கூரிய அறிவும் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். கணக்கு முதலிய கலைகளில் அவர்கள் சிறந்த ஆற்றலுள்ளவர்கள்.

வணிகருள், பழைய காலத்திலும் பிற்காலத்திலும் பல புலவர்கள் இருந்தார்கள். பொன் வாணிகனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் என்பவர்கள் சங்க நூல்களால் அறியப்படுவார்கள். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையைச் செய்த சீத்தலைச் சாத்தனாரும், வேறொன்றாகிய குண்டலகேசியை இயற்றிய நாதகுத்தனாரும் வணிக மரபினரே.

செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள திருக்கச்சூரென்னும் ஸ்தலத்திலுள்ள சாஸனமொன்றில், சாத்தனார் வழி வந்த ஒருவரைப்பற்றி செய்தி காணப்படுகிறது. அவருக்குப் பெருநம்பி என்னும் பட்டம் உண்டென்றும் தெரிகிறது. பாண்டிய அரசனுக்கு மந்திரியாக இருந்த குலச்சிறை நாயனார் அப்பட்டம் உடையவர். தக்கயாகப்பரணி யென்னும் நூல் உரையில் பெருநம்பி யென்னும் பட்டம் அரசனுடைய மந்திரிகளுக்கும் அவர்களைப்போன்ற பெரிய அதிகாரிகளுக்கும் வழங்கப்படுவதென்று தெரிகிறது. ஆதலின், சாத்தனார் வழிவந்த பெருநம்பி ஒரு பெரிய அதிகாரியென்று கொள்ளலாம். அதனால் வணிக மரபினர் அரசர்களுக்கு மந்திரிகளாகவும் பெரிய அதிகாரிகளாகவும் இருந்தமை பெறப்படும்.

பெரிய புராணத்திற் சொல்லப்படும் நாயன்மார்களில் இயற்பகையார், அமர்நீதியார், மூர்த்தியார் காரைக்காலம்மையார், களக்கம்பர் என்னும் ஐவரும் வணிக மரபினர். இவருள் மூர்த்தி நாயனார் சிவபெருமான் திருவருளால் அரசராக இருந்து ஆண்டு வந்தார். அச்செயலால் வணிகர் அரசுரிமையைப் பெறுவதுமுண்டென்று தோற்றுகின்றது. பதினொராந் திருமுறையிலுள்ள நூல்களை இயற்றிய பலருள் ஒருவரும் பெருந் துறவியருமாகிய பட்டினத்தடிகளின் பெருமையை அறியாதவர் யாவர் ? அவர் வணிக மரபிற் பிறந்து என்றும் குன்றாத பெரும்புகழை அம்மரபினுக்கு உண்டாக்கினார்.

(குமரிமலர்)

# நாட்டுப் பாடல்கள்

(வெள்ளவத்தை மு. இராமலிங்கம்)

நாட்டுப்பாடல் என்றால் என்ன? இவ்வினாவை எழுப்பிப் பாருங்கள் படித்தவர்களிடமும் படியாத வர்களிடமும். படித்தவர் சர்வகலாசாலைப் பட்டங்கள் பல பெற்றிருக்கலாம், ஆயினும் இத்துறையில் சிறிதும் பயிலாதவராயின் அவரும் படியாதவருக்குச் சமமே. ஆகையால் இவ்வினாவிற்குச் சரியான விடை தருபவர்களை உங்கள் கைவிரலில் எண்ணிவிடுவீர்கள். இவ்வளவு தூரம் நாம் சீர்திருந்தியிருந்த போதும் கலைத் துறைகளில் நாம் இன்னும் பாராமுகமாயிருத்தல் நம் குறையேயாகும். நாடு முன்னேற வேண்டுமாயின் மக்கள் முன்னேற வேண்டும். தாம் தாம் கற்கும் கல்வியே பெரிது என்றிருத்தல் கண் மூடித்தனம் ஆகும். அயலான் கற்கும் கல்வியையும் ஓரளவிற்கு மதித்தல் வேண்டும். இவ்வாறு மதித்து நடந்தால் இவ்வினாவிற்கு விடை பலரும் தரக்கூடிய வராவர். நாட்டுப்பாடல் என்றால் ஒப்பாரிப்பாடல் என்றே பலரும் தம் மூளையில் ஆணிபோல் உறுத்தி வைத்துக்கொண்டிருக்கின்றனர். பாவம், அவர்கள் மூளையில் வேறு எதுவும் தட்டுவதில்லை. சிந்தனை சிறிது இருந்தால் வகைவகையான பாடல்களைக் காண்பர்.

ஒரு நாள் மாலைப் பொழுதில், "சிறுவர்க்குரிய நாட்டுப் பாடல்கள் இன்னும் எனக்குக் கிடைக்கலாம்; தேடிப் பார்ப்போம்" என்று சிந்தனை செய்து கொண்டு என் நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றேன். வீட்டு முற்றத்தில் கல்வியில்லாத கிழவி ஒருத்தி தன் கால்களை நீட்டிக்கொண்டு நிலத்தில் இருந்தாள். "அஞ்சு வயதுப் பிள்ளைக்கு ஐம்பது வயதுப் பெண் கால் முடக்க வேண்டும்" என்றோ, "சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை" என்றோ என்னைக்கண்டதும் அந்த அம்மையார் தன் கால்களை முடக்கிக்கொண்டு என்னைப்பார்த்து முகமலர்ந்தாள். அவள் ஒடுக்கமும் முகமலர்ச்சியும் என் மனதை அவள்பால் இழுத்தன. இந்த மூதாட்டியுடன் இரண்டொரு சொல் பேச எண்ணி,

**எந்த ஊரு, எந்தத் தேசம்**
**எனக்கறியச் சொல்லுமம்மா?**

என்று கேட்டேன்.

**வடக்கே வடதேசம்**
**வாழுறது பலாங்கொடை**

என்றாள் அம்மூதாட்டி. நான் கேட்ட கேள்வியும் அவள் சொன்ன மறுமொழியும் ஓர் அழகிய நாட்டுப் பாடலாகிவிட்டது. இப்பொழுது முழுவதையும் தருகிறேன்.

**எந்த ஊரு, எந்தத் தேசம்,**
**எனக்கறியச் சொல்லுமம்மா?**
**வடக்கே வடதேசம்**
**வாழுறது பலாங்கொடை**

இதுதான் நாட்டுப் பாடல். இதுபோன்ற சந்தர்ப்பங்களிலேதாம் சமயோசிதமாக நாட்டுப் பாடல்கள் உருவாகின்றன. முதல் இரண்டடி களையும் நானே இயற்றவில்லை. நான் முன்னர், அப்பகுதியைப் பிறரிடம் கேட்டு மனப்பாடம் பண்ணியிருந்தேன். அதனால் இந்தக் கிழவி மிச்சத்தைத் தருமோ, எவ்வகையில்தரும், என்று பரீட்சிக்கவே போக்கடிபோக்காய்க் கேட்டேன். கிழவிக்கு உள்ள இயற்கை அறிவும் கவி உள்ளமும் தக்க இடங்கண்டபோது, இனிமையும் எளிமையும் கருத்தும் அமைந்த பாடலைக் கிளப்பியன.

நாட்டுப்பாடலை யார் பாடினார்? என்று எவராவது ஒரு வினா எழுப்பினால் நீங்கள் இலேசாய் விடை கூறிவிடலாம். கல்வியில்லாத கன்னியர்கள், மங்கையர்கள், தாய்மார்கள், தொழிலாளர்கள் என்னும் இன்னோரன்னவர்களில் எவரேனும் நாட்டுப் பாடல்களைப் பாடிவிடலாம்.

இனி, அவர்கள் எப்படிப் பாடினார்கள்? சிரிப்பு வரக்கூடிய உணர்ச்சியானது ஒருவன், ஒருத்தியின் உள்ளத்தில் எழும்போது ஹாஸ்யப் பாடல் உதயமாகும். இவ்வாறே அழுகை அடங்காமல் எழும்போது ஒப்பாரிப்பாடல் உதயமாகும். உவகை ஓடும்போது காதலரிடையே காதல் பாடல் உதயமாகும். எவரையேனும் பழிக்கும்போதும், எதனையேனும் கண்டு அஞ்சும்போதும், எதனையேனும் அதிசயப்படும் போதும், எவரோடேனும் கோபிக்கும்போதும் அந்த அந்தச் சுவைப் பாடல் உதயமாகும். இவற்றிற்கு உதாரணங்கள் பின்னர் வரும்.

இப்பாடல்களில் புலமையோ, கவித்திறனோ காண்பதற்கில்லை. எனினும் இத்தகைய பாடல்களில் உணர்ச்சி உண்டு; ஓசை உண்டு; இன்பம் உண்டு; இயற்கை மணம் உண்டு; சுருங்கச் சொல்லின் ஜீவன் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் பாடல்கள் எத்தனை அடிகளால் வந்தாலும், பொருள் எளிதில் விளங்கும். சிற்சில பாடல்களில் வினவும் விடையும் ஒன்று சேர்ந்திருக்கும். வினு நேர் நேராய் இராது. விடையும் அப்படியே இருந்தும், அவற்றின் பொருள் மனதில் எளிதில் தட்டாமல் போகாது.

பாமர மக்களின் உள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சியின் உருவங்களைப் பார்க்க வேண்டுமெனின் கிராமங்களிலே தாம் சுத்தமாகப் பார்க்கலாம். ஒரு கிராமத்தில் பசியினுல் வரும் கோபத்திற்கு ஓர் பாடல் உருவாகின்ற தன்மையைப் பாருங்கள்.

ஓர் ஊரில் ஓராண்டு பஞ்சம் ஊரை வாட்டியது. கூடையில் நெல்லுக் கட்டிவைத்திருந்தவர்கள், கூடையை அவிழ்த்து ஒருநேரம் சோறு உண்டு வந்தார்கள். நெல்லு இல்லாதவர்கள் வரகு, குரக்கன், தினை, சாமி முதலிய தானியங்களை உண்டு வந்தார்கள். அவை தாமுமில்லாதவர்கள் இலை குழைகளை அவித்து உண்டார்கள். ஊர் முழுவதும் இலை குழைகளை உண்டு வந்ததனுல் செடிகளும் வறிதாயின. அதன் பின்னர் மக்கள் காரை இலையை அவித்துக் குடித்து வந்தனர். ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர்.

ஒரு வேளாளன் மட்டும் தன் வயலில் கீரை விதைத்து, அதனைக் காலையும் மாலையும் காவல் செய்துவந்தான். அவனுக்குக் கூலி வேலை செய்து வந்த பள்ளனின் மனைவிக்கு அந்தக் கீரையிலே ஒரு கண். வேளாளனே அவன் செய்த வேலைக்கு அன்றன்று சம்பளங்கொடுத்து வந்தான். பள்ளன் மனைவி தன் கணவனைப் பார்த்து "ஓடியோடி வேளாளனுக்கு வேலைசெய்கிறுயே, அந்தக் கீரையில் ஒரு பிடி வாங்கி வரக்கூடாதா ?" என்றுள்.

பள்ளனுக்கும் அந்தக் கீரைமேல் ஆசை இல்லாமல் இல்லை. பசியால் வாடும் சனங்களுக்கு வேளாளனும் பகிர்ந்து கொடுத்துச் சாப்பிடலாம். ஆனுல் அவன் கொடுக்கமாட்டான் என நினைத்து வாளாவிருந்தான். அப்பள்ளன், தன் மனைவிக்கு என்ன சொன்னுன் தெரியுமா ?

**காரை கிடைக்காத**
**காந்தாரப் பஞ்சத்தில்**
**கீரை கொடுப்பானே**
**கீழ் சாதி வெள்ளாளன்**

காந்தாரம் என்பது பெருங்காடு. காடு கூட மழையில்லாப் பஞ்சத்தால் கருகிப் போய்விட்டதாம். பஞ்சம், கொடிய பஞ்சம் என்பது அவனுடைய கருத்து.

அதே கிராமத்தில் சிரிப்புச் சுவைக்கு ஓர் பாடல் உதயமாகின்ற விதத்தைப் பாருங்கள்.

அயல் வீட்டுப் பள்ளனுக்கு மனைவியர் இருவர். முதலில் ஒரே வீட்டில் பெண்கள் இருவரும் இருந்து வந்தனர். பின்பு அதே வளவில் இரண்டு வீடுகள் கட்டி இருவரையும் புறம்பாக இருத்தினுன். உழைப்பை எல்லாம் இரண்டாம் மனைவியிடம் கொடுக்கிறுன் என்று முதல் மனைவி கோபித்தாள். பெண்கள் இருவருக்கும் சக்களத்திப் போர் உண்டாயது. கணவனும் நோயாளியாகி உழைப்புப் பிழைப்பில்லாமல் இருந்தான். அந்நிலையிலும் மனைவியர் அவனோடு ஒரு நாள் சண்டைபோட்டனர். அயல் வீட்டுப் பெண் அச்சண்டையை தன் வேலியருகில் நின்று கேட்டாள். வயலில் வேலைசெய்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்த அவள் கணவன், "அயல் வீட்டில் என்னடி சத்தம்" என்று கேட்டான். அவள் அதற்கு விடையாக,

**அரிசி விற்கிற விலையிலே**
**அவர் கிடக்கிற கிடையிலே**
**இரண்டு பெண்டாட்டி ஆசை**
**இழுபடுகுதே மீசை**

என்று சொல்லிச் சிரித்தாள்.

இனி, மலை நாட்டுப் பாடல்களை அறிய முக்கியமாகக் கண்டிக்குச் செல்லுதல் வேண்டும்.

மலேயா முழுவதையும் யாழ்ப்பாணத்தவர் சிங்கப்பூர் எனச் சொல்வது போலவே இலங்கையிலுள்ள மலைப் பிரதேசங்களைக் கண்டிச் சீமை என இந்தியர் சொல்லி வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் இந்தியத் தொழிலாளர்களை இங்கே கொண்டு வந்து, வேலை செய்வித்து, தேயிலை ரப்பர் தோட்டங்களைத் திறந்தனர். அப்போது புகையிரதப் பாதையும் இல்லை; பகிரங்க வீதிகளும் இல்லை. அக்காலத்தில் மலைநாட்டினில் எழுந்த கவி ஒன்று இது,

**அட்டைக் கடியும்**
**அரிய வழி நடையும்**
**கட்டை இடறுதலும்**
**காணலாம் கண்டியிலே**

மலைநாட்டில் அட்டையானது இரத்தத்தைக் குடிக்கக் காலால் எறிவிடும். புகையிலையை வாயிலிட்டு ஊறிய எச்சிலை அட்டையில் துப்பி அதனைக் கழற்றினர். காடு வெட்டிய கட்டை காலை இடறுவது.

அட்டைக் கடி இன்றும் உண்டு. அரிய வழி நடையைப் பற்றி இன்னொரு பாடலும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்றமடி பெத்துராசி ;**
**இறக்கமடி கொட்டியாகலே ;**
**தூரமடி தொப்பித் தோட்டம்**
**தொடர்ந்து வாடி நடந்துபார்ப்போம்**

இப்பாடல் தெம்பாங்கு மெட்டில் அமைந்திருந்த போதும் இதனை வழி நடைச் சிந்து என்பர். பெத்துராசி, கொட்டியாகலே என்பன டிக்கோயாப் (DICKOYA) பிரிவில் பொகவந்தலாவை (Bogawantalawa) யிலுள்ள இரு தேயிலைத் தோட்டங்களின் தமிழ்ப் பெயர்கள் ஆகும். இத்தோட்டங்கள் கடல் மட்டத்திலிருந்து எத்தனை அடி உயரம் என்று அரசினர் அளந்து அறியுமுன்னர் எழுந்த கவி இதுவாகும்.

பெத்துராசித் தோட்டம் (Fetteresso Group) கடல் மட்டத்திலிருந்து 5,300 அடி உயரத்திலிருக்கின்றது. கொட்டியாகலை தோட்டம் (Kotiyagala Estate) கடல் மட்டத்திலிருந்து 4,100 தொடக்கம் 5,600 அடிவரை உயரத்தில் இருக்கின்றது. தொப்பி தோட்டம் (Hatton) கொட்டியாகலையிலிருந்து 14 மைல் தூரத்தில் இருக்கின்றது. எனவே அநுபவத்திலிருந்து எழுந்த நாடோடிக் கவிஞனின் மதிப்புக்கும் அரசாங்க அளவைக்காரரின் கணக்குக்கும் வித்தியாசமே இல்லையென்பது தெளிவாகின்றது.

இனி, மட்டக்களப்புப் பாடலைப் பார்ப்போம். மட்டக்களப்புக் கிராமங்களில் நிலவு பொழியும் இரவு வேளையில் கிராம மக்களுக்கு உற்சாகம் பிறந்துவிட்டால், அவர்கள் வாக்கினின்றும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கவிகள் உருவாகின்றன. மட்டக்களப்பு நாட்டுப் பாடல்களில் முதல் ஸ்தானம் வகிப்பது **கவி** ஆகும். அங்கே சூடு மிதிப்பதில் கமக்காரன் ஒருவன் தான் படும் கஷ்டத்தைத் தன் மனைவிக்குத் தூதாகச் சொல்லி விடுகின்றான்.

மட்டக்களப்பு மக்களில் அநேகர் குடியிருப்பது ஓரிடம்; சேனை செய்வது இன்னோரிடம். சேனையிலிருந்து குடி மனைக்கும் குடிமனையிலிருந்து சேனைக்கும் போவார் வருவார் உண்டு. தபாலுந் தந்தியுந் தற்காலஞ் செய்யுந் தொழிலை தனி வழி செல்லக்கூடிய ஆட்களே அக்காலஞ் செய்துவந்தனர்.

சூடுபோட்டு நெல்லுத் தூற்றிக்கொண்டு நின்றான் ஒருவன். "உன் மனைவிக்கு ஏதும் சொல்ல வேண்டுமா?" என்று கேட்டான் குடிமனைக்குச் செல்லும் ஒருவன். நெல்லைத் தூற்றிக்கொண்டே,

**சொல்லிடுகா தோழே, அந்தத்**
**தோகை மயிலாளோடே,**
**சூடு போட்டு நெல்லுத் தூற்றிக், கன**
**தொல்லையிலே நிக்கேனெண்டு.**

என்றான் அவன்.

இனிக் **குறையிரத்தல்** வருகின்ற விதத்தைக் காட்டுகின்றேன். பிள்ளை இல்லாத பெண்களை மலடி என்றும் இருளி என்றும் மறைமுகமாகவும் அவர்களுக்குக் கேட்கக்கூடியதாகவும் மற்றோர் பேசுவர். எனவே தமிழ் மக்களுள்ளும் இஸ்லாமிய மக்களுள்ளும் பிள்ளையில்லாச் குறை பெருங் குறையாகின்றது. வசைச் சொற்களால் மிகவும் மனம் நொந்த மட்டக்களப்புப் பெண் ஒருத்தி என்ன சொல்லுகின்றாள் என்று பாருங்கள்.

**மண்டூருக் கந்தா, என்**
**மனக் கவலை தீர்த்தாயெண்டால்**
**சாகுமளவும் உன்னைச்**
**சாமியென்று கும்பிடுவேன்**

என அழுதழுது அல்லும் பகலும் வரம் வேண்டுகிறாள் அவள். மட்டக்களப்பில் மண்டூர் ஒரு கிராமம். வயல்களாலும் ஓடைகளாலும் சூழ்ந்த கிராமம். பால், தயிர் எப்பொழுதும் கிடைக்கும் அங்கே. சைவ நன் மக்கள் வாழும் பதி அது. அருட் பெருங் கடல் கோயில் கொண்டிருக்கும் பதியும் அது.

இனி, சில மைல்களுக்கப்பால் முஸ்லிம் கிராமத்தில் இஸ்லாமியப் பெண் ஒருத்தி மாலையில் வீட்டுக்கு விளக்கேற்றி வைத்துவிட்டு,

**மாலே விளக்கெரிய**
**மணவாளன் சோறு தின்னப்**
**பாலன் விளையாட, ஒரு**
**பாக்கியந்தா ஆண்டவனே**

என ஒவ்வொரு மாலைத் தொழுகையிலும் அழுதழுது வேண்டுகின்றாள்.

இனி, **சோடிக் கவிகள்** வரும் வகையைப் பாருங்கள். தெம்பாங்குப் பாடல்களிலும் மட்டக்களப்புக் கவிகளிலும், ஆடவர் பேச்சு, பெண்டிர் பேச்சு, எனும் சோடிக் கவிகள் உண்டு. இவைகளை ஆண் கலை, பெண் கலை என்பர் மட்டக்களப்பு மக்கள்.

செங்கலடிக்கு அணித்தாயுள்ள ஒரு சிறு கிராமத்தில் ஓர் ஏழைக் குடும்பம். புருஷன் கூலி வேலை செய்வான். உழைப்பு இல்லாத நேரங்களில் உன்னிச்சைக் குளத்துக்குப் போய் மீன் பிடித்து வருவான். பிடித்து வரும் மீனை அவன் மனைவி விற்றுவருவாள். ஒருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வீடு விட்டுச் சென்ற புருஷன் மறுநாள் மாலையாகியும் வீட்டுக்கு வரவில்லை. இப்போது வருவான், பின்னை வருவான், காலை வருவான் என்று பார்த்த வண்ணம் அவனுடைய மனைவி அவனை வீட்டு வாசலில் காத்து இருந்தாள். மூன்றும் நாள் மாலைப் பொழுதில் வெறுங் கையுடன் வீடு வந்தான். இப்படிப்பட்ட வேளையில் ஒரு பெண்என்ன சொல்வாளோ, அதனையே அவளும் சொல்லி விடுகின்றாள்.

**ஊரிலே பிழைப்பில்லாமல்,**
**உன்னிச்சையில் மீன் பிடித்துக்**
**காறிலே திரும்புவாயெண்டு**
**காத்திருந்தேன் இந்தமட்டும்**

"பஸ்" வண்டியைக் கார் எனச் சொல்லுவது கிராம வழக்கு. கணவனும் தான்பட்ட கஷ்டத்தைச் சொல்லுகின்றான். சொல்லும் பொழுது ஒரு சில சொற்களால் நீண்ட நிகழ்ச்சியைச் சொல்லி விடுகின்றான்.

**காத்திருந்து என்ன செய்ய ?**
**காற்றெழும்பி நான் புரண்டு**
**நேற்றிரவு சரி சாமம்**
**நீந்திக் கரை சேர்ந்தேனடி.**

இதனால் மீன் பிடிப்போர் படும் அவலங்கள் தெளிவாகின்றன. இரண்டு அடிகளில் தன் மனைவியின் துயரத்தை மாற்றும் மார்க்கம் தனக்கு இல்லையென்று இரக்கத்துடன் ஓரடியில் சொல்லி புயல் எழும்பியதனால் தான் குளத்தில் விழுந்து புரண்டோடித் திசை மாறிப் பின்பு கரை சேர்ந்ததனையும் மீத மூன்றடிகளில் சொல்லிவிடுகின்றான்.

நாடோடிப் பாடல்கள் சில சந்தர்ப்பங்களிலே தாம் உயதமாகின்றன என்று முன் சொன்னேன். இவை தனிப்பாடல்களாகவும் வரும், கதையோடு தொடர்பு பூண்டும் வரும். கதையோடு வருவதனை ஆங்கிலத்தில் "பலட்" (BALLAD) என்பர் ; வங்க மொழியில் "கீதகாதா." என்பர். தெலுங்கில் "கிராமகீதம்" அல்லது "பதம்" என்பர். இது காதல், வீரம் முதலிய அருஞ் செயல்களைக் கதையாகக்கூறும் ஒரு சிறு பிரபந்தம்.

ஒரு தகப்பனுக்கு முதல் தாரத்தால் ஈர் ஆண் மக்களும், இரண்டாந் தாரத்தால் ஒரு பெண்ணுமாகப் பிள்ளைகள் மூவர் இருந்தனர். தகப்பனுக்கும் தமையன்மாருக்கும் தினமும் வயலுக்கு உணவு கொண்டு சென்று கொடுத்து வந்தாள் அந்தப் பெண். ஒருநாள் ஆற்றைக் கடக்கும் போது அவள், வாளை மீனுடன் விளையாட அஃது அவள் காலைக் கிழித்து விட்டது. உண்மையைத் தாய்க்கு உரைத்தால், தாய் தன்னைத் தண்டிப்பாள் எனப் பயந்து, எப்போதும் தன்னுடன் சண்டையிடும் சின்னண்ணன் அந்தக் காயத்தை உண்டாக்கினான், என ஒரு பொய்யைச் சொல்லித் தாயிடம் தப்பிக் கொண்டாள்.

முதல் தாரத்து இரண்டாவது மகனுக்கு நஞ்சுப் பணிகாரம் சுட்டுக் கொடுத்துத் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டாள் சிற்றன்னை. அவனைப் புதைத்த விடத்தில் ஒரு பூ மரம் உண்டாகிப் பூத்துச் சொரிந்தது. தன் மகளின் விவாக தினத்தன்று அப் பூ மரத்தில் பூப் பறிக்கச் சென்றாள் சிற்றன்னை. அப்போது அப் பூ மரத்திலிருந்த பூக்கள் மறைந்தன. பூ மரத்தைப் பார்த்து பூத் தரும்படி வேண்டினாள். அந்தப் பூ மரம்,

**பூவுந் தருவேன் தாயே**
**பூ வழகும் பார்ப்பேன் தாயே**
**மாலை தருவேன் தாயே**
**மார்பழகும் பார்ப்பேன் தாயே**
**வாளை கிழித்ததல்லோ**
**வடதுருவம் போனதல்லோ**
**சின்னண்ணன் கிழித்ததென்று**
**சொன்னாளே பாதகத்தி**

என்று கூறிய பின்னர் பூக்கள் கொடுத்ததாம்.

இந்தக் கதை சில மாற்றத்துடன் மட்டக்களப்பில் வழங்கி வருகின்றது. ஒரு தாய்க்குப் பிள்ளைகள் மூவர். தங்கை உடுத்தியிருந்த பாவாடையை ஒரு முள் வாழை கிழித்து விட்டது. சின்னண்ணன் கிழித்து விட்டானெனப் பொய் சொல்லித் தப்பினாள். தங்கையின் கலியாணத்தன்று தாயார் பூப்பறிக்கச் சென்ற போது பூ மரத்தில் பூக்கள் மறைந்தன. பின்பு அவை தோன்றின. பூ மரம் தனா தாயாருக்குப் பூக் கொடுக்க மனமில்லாது நின்றதை அறிந்த மூத்த மகன் தானே போய்ப் பூ மரத்தினிடம் பூக் கேட்டான்.

**பூத்தாரும் பூத்தாரும்**
**புண்ணியனே பூத்தாரும்**
**செல்வத்தாற் தங்கச்சிக்குச்**
**செல்லக் கலியாணமாம்**
**வரிசையால் தங்கச்சிக்கு**
**வரிசைக் கலியாணமாம்.**

பூ மரம் அவனுக்கு விடை கூறுகின்றது : விடை கூறுகையில் தாயாருடைய குற்றத்தையும் எடுத்துச் சொல்லுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதிர்காமக் கோயில் வாயிலில் பக்தர்கள் பரவசப்பட்டு வணங்கும் காட்சி.

# கதிர்காம மூதூர்

குல. சபாநாதன்

ஈழநாட்டிலே பெயர் பெற்ற கந்த கோட்டங்கள் பலவுள. கதிர்காமம், நல்லூர், மாவிட்டபுரம், செல்லச்சந்நிதி, வெருகல், இணுவில், குமாரபுரம், கந்தவனம், பொலிகண்டி, நீர்வேலி, பருளாய், மயிலணி, ஜிந்துப்பிட்டி முதலிய தலங்களிலுள்ள கந்த சுவாமி ஆலயங்களுள் மிகவும் பழைமையானது கதிர்காமம்.

"கந்தானுபூதி பெற்றுக் கந்தானுபூதி சொன்ன" எந்தை அருணகிரி நாதரும் தென்னாட்டிலுள்ள தலங்களைத் தரிசித்த பின்னர் ஈழநாடு போந்து, திருக்கோணமலை, கண்டி முதலிய தலங்களைத் தரிசித்துத் திருப்புகழ்மாலை சூட்டியுள்ளார். கடைசியில் கதிர்காமப் பெருமானைத் தரிசித்து ஆனந்த பரவசமுற்று அநேக திருப் புகழ்களைக்கொண்ட பாமாலையைச் சூட்டியருளினர். கருணையே உருவாய அருணகிரி நாதர் 14 ஆம் நூற்றுண்டின் மத்தியில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். இவர் இருபத்தைந்துக்கு மேற்பட்ட திருப்புகழ்ப்பாக்களால் கதிர்காமப் பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

கதிர்காமம் எனுந் தலத்திற்கு கதிருகாம, கதிர்காம, கதிரகாம, கதிரை என்னும் பல மரூஉப் பெயர்கள் வழக்காற்றில் உண்டு என்பது அருணகிரி நாதர் அருள் வாக்கால் அறியக்கிடக்கின்றது. மேலும் மாணிக்க கங்கைக்கு "வடவை ஆறு" என்னும் பெயர் உண்டென்பது, "கலகவாரி போல் மோதி வடவை ஆறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ் கீத கதிரகாம மூதூரில் இளையோனே" எனும் திருப்புகழடியால் அறியலாம். கதிரகாம மூதூர் என்பதனால் அருணகிரிநாதரே இதன் பழைமையைப் புலப்படுத்தியுள்ளார்.

மாணிக்க கங்கை யெனும் கன்னிகை இளமுருகன் எழிலைக் கண்டதும், தன் இரு கரங்கள் நிறையக் கொணர்ந்த மணியையும் முத்தையும் இருமருங்கும் அள்ளி வீசத் தொடங்கினாள் என்கிறார் அருணகிரி நாதர். ஆன்ம நாயகனைக் கண்டதும் மணியும் முத்தும் கைகளிலிருந்து வீசியெறியப்படுவதில் ஆச்சரியம் எதுவும் இல்லையல்லவா?

"மணிதரளம் வீசி அணி யருவி சூழ
மருவு கதிர்காமப் பெருமாள்காண்"

எனக் குறிப்பிடுகிறார்.

கதிர்காமத்தில் உறையும் பெருமானின் வடிவம் யாது என்று அறிய ஆசைப்படுவது மக்கள் இயல்பு தானே. கனக மாணிக்க வடிவன் காதிர்காம நாதன் என்கிறார் அருணகிரியார்.

"கனக மாணிக்க வடிவனே மிக்க
கதிர காமத்தில் உறைவோனே."

அருணகிரி நாதர் கதிர்காமத் தலத்தைப்பற்றிக் கூறியிருக்கும் உண்மைகளை நோக்கினால் அவர் கதிர்காமத்தைத் தரிசித்தார் என்பதில் எள்ளளவேனும் சந்தேகப்பட இடமேயில்லை.

"வனமுறை வேட னருளிய பூசை
மகிழ் கதிர்காம முடையோனே"

"கதிர்விடு வேலைக் கதிரினில் மேவிக்
கலைபல தேர் முத்தமிழ் நாடா"

எனப் போற்றுகின்றார்.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள் காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர்காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறுபடவசுரர் மாள
அமர் பொருதவீரப் பெருமாள்காண்
இருவினையிலாத திருவினை விடாத
இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகு சிலை வேடர் கொடியினதி பார
இருதன விநோதப் பெருமாளே

என்று தமது காட்சிக்களிப்பை வெளிப்படுத்திக் காட்டுகின்றார். கதிர்காம நாதன் அருணகிரி நாதருக்குக் காட்சியளித்தவாற்றினை இத் திருப்புகழ் மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

"உக்ரயானை (எதிர்ப்) படும் ரத்னத்ரிகோண சயிலம், உக்ர கதிர்காமம்" என இத்தலத்தைப்பற்றி வேறொரு திருப்புகழிலும் குறிப்பிட்டுள்ளார்.

கதிர்காம நாதன் எத்தகைய இரக்கம் பூண்டவர் என்பதை அருணகிரியாரே உலகிற்கெடுத்துக்காட்டியுள்ளார்.

"இத மொழி பகரினும் மதமொழி பகரினும் ஏழைக் கிரங்கும் பெருமானே" என வாயார வாழ்த்துகின்றார்.

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றுதிருக்க முடியுமா? நெஞ்சில் ஒரு கால் நினைக்கில் இருகாலும் தோன்றுமல்லவா?

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார் மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவை தீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாண்
மைந்தா குமாரா மறைநா யகனே.

கதிர்காமத்திலுள்ள கிரிவிகாரை புனருத்தாரணஞ் செய்யப்பட்ட பின் எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதைக் காட்டுதற்குச் சைத்திரீகன் வரைந்த படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணிக்கக் கங்கையில் தீர்த்தமாடிய பின் தங்கள் நேர்த்தியைப் பூர்த்திசெய்யச் சிலர் காவடியெடுக்கின்றனர்.

# கதிரை யாத்திரை

பண்டைக் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு நடையாகக் கதிர்காமத் தலத்தையடைந்து கதிர்காம நாதனை வழிபடுவோர் பலர் இருந்தனர். ஆனால் அவர்கள் தம் யாத்திரையில் ஏற்பட்ட அநுபவங்களையெல்லாம் ஒரு யாத்திரை நூலாக எழுதிவைக்கவில்லை. எண்பது வருடங்கட்கு முன் நல்லூரில் வாழ்ந்த விநாயக மூர்த்திச் செட்டியாருக்கு காசநோய் ஏற்பட்டது. அது எவ்வித மருந்தினாலும் மாறவில்லை. கடைசியாக அவர் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு வழியிலுள்ள தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு கதிர்காமத்தையடைந்து, அப் பெருமான் திருவருளால் தமது நோய் தீரப்பெற்றார். பின்னர் நல்லூரையடைந்து தமது யாத்திரையின் வரலாற்றை ஒரு நூலாக உருவாக்கி, **கதிரை யாத்திரை விளக்கம்** எனும் பெயரிட்டு நல்லைச் சுப்பிரமணியப் பெருமான் சந்நிதியில் அதனை அரங்கேற்றினார். பக்திச் சுவைமிக்க இப் பனுவலில் கதிர்காம விழாக் காட்சியைப் புலவர் அவர்களுடன் யாமும் சென்று கண்டு மகிழ்வோம்.

பன்னிரு கரமுடையான் அய்யன்
பவனிவருங் காட்சியைப் பகருவேன்கேளும்

வெஞ்சின வேழமொன்று பாகனுடன்
விரைவுடன் வந்துதீர்த்த நதியிறங்கிக்

குஞ்சரம் படுத்துக்கொள்ள யாவருங்
கூசாமற் கிட்டியதை முழுக்காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டிசையும் போற்றி செய்யும் களிற்றை
எங்கள் பிரானமருந் திருக்கோவின்

மண்டபந் தனிற் கொணர அதனை
மாசிலாக் கற்பகனுர் வந்துகண்டு

பூசினுர் திருநீற்றை சந்தனப்
பொட்டு மிட்டார் வினைக் கட்டுவிட்டார்

நேசமுடன் யானையங்கே வந்து
நின்ற துயர்ந்த செட்டைப் படிநடுவே

நின்றிடும் யானையின்மேல் பட்டு
நிலவியொளிரும் பல வணிகள்தனைத்

துன்றிய தொழிலாளர் அணிந்து
துலங்கும்பொற் பெட்டியதின் மேலேற்றி

கட்டினுர் கயிற்ருலே நடுவில்
கனத்ததங் கக்குடையொன் றிருத்திவிட்டார்

சிட்டர்கள் போற்றிசெய்யக் கரிக்குச்
சிங்கார மிப்படிச் செய்யும்பொழுதில்

செய்ய முருகவேளை எப்பொழுதும்
சேவிக்குங் கற்பகனுர் சென்றுகண்டு

பையவேயுட்புகுந்து வாய்கட்டிப்
பண்புடனெரு பொருளைச் சிரசில்வைத்து

*குப்பாய மீதிலிட்டுப் பெண்கள்
கூடிவர வேயிரட்டைப் படிமீதேறி

செப்பு கரி மீதிருக்கும் பேழைக்குட்
சிரசிலிருக்கும்பொரு ளதனை வைத்தார்

மூடினுர் பெட்டிதனைத் தன்னை
மூடியிருக்குங்குப் பாயமெடுத்தார்

கூடிக்கரி மீதிலிருந்தார் யானை
குளறி மதசலம்விட் டதுநெளிய

வேலவர் பவனிவந்தார் அந்த
வேடிக்கையைச் சொல்லுகிறேன் கேளுமுலகீர்

காலனைச் செயித்தபரன் தந்த
கந்தன்முன் னுலாத்திப் பெண்கள் வரவே

வண்ணக்குடை யதிகாரம் முதலாய்
வருகிற பெரிய நிலைமைகளும்

எண்ணுங்கா வேற்றுமையும் மற்றும்
எல்லோர்க ளுஞ்செறிந்து துன்னெனவர

சிங்களர்யா வகர் சீனர் மலாடர்
தெலுங்கர் கலிங்கர்கன் னடர்களும்

கொங்கணர்வங் கணரீழர் மலையாளர்
குப்பகர் சாளுவர்கள் மாளுவரும்

*குப்பாயம்-சட்டை; முக்கோணப்பை.

தங்குந் துலுக்கருடனே ஒட்டியர்
தாபோதர் பாகவதர் வேதியரும்

மங்களர் யாழ்ப்பாணர் எல்லோரும்
மகிழ்வுடன் முருகனைப் போற்றிப்புகழ்வார்

பேரிகை தவில் முழங்க நல்ல
பெரிய முரசப்பறை தானுமுழங்க

சீர்செறிடம் மாரமுழங்க மத்தளம்
செறியுந்தண் ணுமைப்பறை தானும் முழங்க

கொம்பு துடிகள் முழங்க வீணைகள்
கூறரிய வேய்ங்குழல் தானும் முழங்க

தம்புரு நாதமுழங்க அண்டந்
தான்வெடிக்க நாகசின்னந் தானும் முழங்க

சிங்களர் பதம் படிக்க நானுஞ்
சேர்ந்தவர்க ளோடுதமிழ்ப் பதம்படிக்க

அங்கமெல் லாமுருக அந்த
ஆலாத்திப் பெண்கள்கீர்த் தனம் படிக்க

ஆனந்தக் கூத்தாடுவார் கதிரை
ஆண்டவனே யென்றவன்றன் புகழ்பாடுவார்

தேனுந்தும் மலர்ச்சோலைக் கிரிவாழ்
செய்யாமுரு கையா உனக் கபயமென்பார்

உண்ணுமுலை தந்தபாலனே அன்பர்
உள்ளத் தொளித்துறையுங் கள்ளவேலனே

நண்ணுர் புரங்களெரித்த நல்ல
நம்பனருள் தும்பிமுகன் பின்புவந்தோனே

*காலா யுதக் கொடியனே அந்தக்
கானகத்தில் வேங்கைமா மாகிநின்ருேனே

வேலா யுதம்பிடித்தவா வள்ளி
விரும்பத் தினைப்புனத்திற் போய் நடித்தவா

அய்யாமுரு கையனேபோற்றி உனக்
கபய மபயமென்னை யாளுவாய்போற்றி

தையலுமை மைந்தனேபோற்றி என்னைத்
தாபரித் தருளவேணுந் தற்பராபோற்றி

தேவர்சிறை மீட்டவாபோற்றி நல்ல
திருவாவி னன்குடி யுகந்தவாபோற்றி

தாவிமயில் வீரனேபோற்றி †நல்லைத்
தொங்க லணிந்தருளும் மார்பனே போற்றி

அதிகப்படுந் துயரினல் நாங்கள்
அலைந்தோந் துணையின்றி யுலைந்தோமே

(22 ம் பக்கம் பார்க்க)

* காலாயுதக்கொடி-கோழிக்கொடி
† முல்லைத் தொங்கல்-வெட்சி மலர் மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............



கதர்காமத்தில் பெண்களும் காவடியெடுப்பது சர்வசாதாரணக் காட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துராஜவலைத் திட்டம்

பல வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த முத்துராஜவலைத் திட்டத்தை 1956 ம் ஆண்டு புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அபிவிருத்தி செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தது. களனிகங்கை முகத்துவாரத்திற்கும், நீர்கொழும்பு பரவைக்கடலுக்கும் இடையே பரந்து கிடக்கும் 6,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள சதுப்பு நிலமே முத்துராஜவலை என அழைக்கப்படுகிறது. இப்பிரதேசத்தின் 4,000 ஏக்கர் விஸ்தீரணமான பிரிவு சதுப்பு நிலமாகும்.

இதன் பெரும் பகுதி கடல்மட்டத்துக்கு மேல் 6″ உயரமுடையதாயிருக்கிறது. சில பிரிவுகள் கடல் மட்டத்திலிருந்து 2″ உயரத்துக்கு கீழிருக்கின்றன. இப்பிரதேசத்தில் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதால் எப்பொழுதும் நீர் நிறைந்து காணப்படுகிறது. இது தாழ்ந்த பிரதேசமாயிருப்பதால் பெருக்குக் காலத்தில் உவர் நீர் பெருகி இந்நிலத்தை உவர் நீர் நிறைந்த சதுப்பு நிலமாக்குகின்றது.

கடந்த பத்து வருடங்களுக்கு முன்னே இச்சதுப்பு நிலத்தின் பெரும் பகுதியை பெரு நிலச் சுவாந்தார்களிடமிருந்து அரசாங்கம் வாங்கி 2½ ஏக்கர் விஸ்தீரணமான 1000 சிறுசிறு காணித்துண்டுகளாகப் பங்கிட்டு அவற்றை பண்படுத்துவதற்காக நிலமில்லாதவர்களுக்கு வழங்கியது. ஆனால் இயற்கையாகவே இந்நிலப் பிரதேசம் நெல் வேளாண்மையின் மூலம் நல்ல விளைவைக் கொடுக்கக் கூடிய நிலையிலிருக்கவில்லை. நல்ல விளைவைப் பெற அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட உதவி தேவைப்பட்டது. எனவே, 1956–57 ல் தற்போதைய அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவியளிக்கும் ஒரு திட்டத்தை ஆரம்பித்து வைத்தது.

இங்குள்ள விவசாயிகள் அநுபவித்த பெருங் கஷ்டங்களில் ஒன்று தாம் விவசாயம் செய்யும் வயல் நிலங்களை அடைய முடியாதவாறு இந்நிலப்பரப்பு சேற்றினாலும், வெள்ளநீரினாலும் நிறைந்திருந்ததாகும். நீர் தேங்கியிருந்த பல இடங்களில் அணைகள் கட்டப்பட்டதோடு, தென்னை மரங்கள் இடையிடையே கடவைகளாக போடப்பட்டன. இவ்வருடம் இத்துறையில் மேலும் பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டன. அணைகள் கட்டப்பட்டு, நீர்நிலைக்கடவைகள் போடப்பட்டு இதுவரை வயல் நிலங்களை அடைவதிலிருந்த சங்கடம் தவிர்க்கப்பட்டது.

கடந்த வருடம் பெருந்தொகையான விவசாயிகள் தமக்கு வழங்கப்பட்டிருந்த வயல் நிலங்களை புறக்கணித்து விட்டது தெரியவந்தது. உடனே, விவசாயிகளால் புறக்கணிக்கப்பட்ட 250 பங்குக் காணிகள் நிலமில்லாதவர்களுக்காக பராதீனப்படுத்தப்பட்டது. அத்துடன், அரசாங்கம் புதிய நிலத்திலுள்ள எல்லா விவசாயிகளுக்கும் 100 ரூபா உதவிப்பணம் வழங்கியது. இதன் பயனாக 1956 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் எல்லாக் காணித்துண்டுகளும் பண்படுத்தப்பட்டு பயிரிடப்பட்டன. கடந்த மார்ச்சு மாதம் முத்துராஜவலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக விளைவை இழந்த விவசாயிகளுக்கு அரசாங்கம் புனர்வாழ்வு அளித்தது. வெள்ளத்தினால் அள்ளுப்பட்டு விதை நெல்லை இழந்த 200 பங்கீட்டுக் காணிக்காரர்களுக்கு விதை நெல் இலவசமாக வழங்கப்பட்டது.

இவ்வருடம், அரசாங்கம் நான்கு பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவ முயன்று வருகிறது. முத்துராஜவலைத் திட்டத்தின் கீழ் வயல்நிலங்களைப் பெற்றவர்களே இச்சங்கத்தில் அங்கத்தவர்களாக விருப்பர். ஒவ்வொரு சங்கத்திலும், சராசரி 225 பேர் அங்கத்தவர்களாக இருப்பர். இச்சங்கங்கள் விவசாயிகளின் சாதாரண தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு விதை நெல் பசளை முதலியவற்றையும் வழங்கும்.

இவ்வருடம் அரசாங்கம் முத்துராஜவலை விவசாயிகளுக்கு அறுவடை நெல்லைச் சேகரித்து சூடு மிதிப்பதற்கு ஐம்பது நெற்களங்களைக் கட்டத் தீர்மானித்திருக்கிறது. இத்திட்டத்தின் ஐந்து நீண்ட வயற் பரப்பின் விளைவை அடிப்பதற்கு ஒவ்வொரு களமும் உதவும். இக்களங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் பண உதவியளிக்கும். இத்திட்டத்தின் கிழக்கெல்லையிலே ஒல்லாந்தர் வெட்டிய வாய்க்கால் ஓடுகிறது. விவசாயிகள் தாம் வயல் நிலங்களை அடைய இவ்வாய்க்காலைப் பல இடங்களில் கடந்து செல்லவேண்டியதாயிருக்கிறது. இவர்கள் வயல் நிலங்களை இலகுவில் அடைவதற்காக அரசாங்கம் பல இடங்களில் வாய்க்காலுக்குக் குறுக்கே கடவைகளைக் கட்டத் தீர்மானித்திருக்கிறது.

இவ்வருடம் வயல்நிலங்களைப் பண்படுத்த எருமைகளை கூட்டிச் செல்லத்தக்கதாக பெருந்தொகையான கால்நடைக் கடவைகள் வாய்க்காலுக்குக் குறுக்கே கட்டப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துராஜவலேயில் காமம் செய்யும் குறிப்பிடத் தக்க விவசாயிகள் வெகுதூரத்திலிருந்து இங்கு வந்து வேளாண்மை செய்கின்றனர். அத்துடன் பலர் தங்களுக்குச் சொந்தமான வீடில்லாதிருக்கின் றனர். எனவே, அரசாங்கம் இத்திட்டத்திற்கு அருகாமையிலுள்ள மலேப்பிரதேசத்தைப் பயதீன ப்படுத்தி 200 விவசாயிகளுக்கு ¼ ஏக்கர் வீதம் வழங்கத் தீர்மானித்துள்ளது. இக்காணித்துண்டு களில் ஒரு வீட்டையும், கிணற்றையும், மலசல கூட த்தையும் கட்டுவதற்கு தேவையான உதவிப் பண த்தையும் வழங்கும்.

அரசாங்கம் இதுவரை எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளோடு விவசாயிகளுக்கு நேரடியாக உதவும் நோக்கத்துடன் முத்துராஜவலேயில் நீர் தேங்கி நிற்பதைத் தடுப்பதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. களுஓயா வெள்ளப்பெரு க்கு வயல்நிலங்களில் பாயாதிருக்க மாபோலேயில் 1440 அடி நீளமான வடிகால்—நீர்ப்பாய்ச்சற்று ம்பு கட்டப்பட்டிருக்கிறது. களுஓயா விசாலப்படுத்தப் பட்டு களுஓயா நீர் வடிந்து செல்லத்தக்கதாக மேலும் ஒரு தூம்பு கட்டப்பட்டு வருகின்றது. அத்துடன் முத்துராஜவலேத் திட்டத்திற்குட்பட்ட அணேயும் வடி கால் வாய்க்கால்களும் நீர் விரைவில் வடிந்து செல்லத்தக்கதாகச் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன. அடுத்த வருடமும் இதேவிதமான அமைப்பு வேலே கள் மேற்கொள்ளப்படும். முத்துராஜவலேத்திட்டத் தின் இறுதிக் கட்டத்தில் இப்பிரதேசம் பல பிரிவு களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவையும் சேர்ந்த நீரை இறைக்கத்தக்க குழாய்கள் பொருத்தப்படும்.

முத்துராஜவலேத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க நட வடிக்கையொன்று இவ்வருட ஆரம்பத்திலே காணி, காணியபிவிருத்தி அமைச்சர் அவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர் முத்துராஜவலேத்திட்ட அபிவிருத்திக் குழு ஒன்றை நியமித்ததே இந்நட வடிக்கையாகும். இக்குழுவில் இத்தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவரான கௌரவ திரு. ஸ்ரா ன்லி டி சொய்ஸா அவர்களும் அபிவிருத்தி வேலே யைநடத்தும் அரசாங்க உத்தியோகத்தர்களும் அங் கம் வகிக்கின்றனர். இக்குழு கூடிச் செய்த சிபார்சு களின் படியில் நடவடிக்கை யெடுக்கப்பட்டு வருகின் றது. இக்குழு இத்துறையில் ஈடுபட்டுள்ள உத்தி யோகத்தருடன் இணைந்து வேலே செய்வதோடு அபிவிருத்தி வேலேக்கு உதவியளிக்கத் தக்க ஆலோ சனேகளேக் கூற முடியும்.

அபிவிருத்தி வேலேயைத் திட்டமிட்ட முறையி லேயே நடத்தியமையால் கடந்த வருடம் முத்துராஜ வலேப் பிரதேசத்தில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலத் தில் விவசாயம் செய்யப்பட்டது. இதற்காக அர சாங்கம் பங்கீட்டுக் காணிக்காரர்களுக்குச் சுமார் 100,000 ரூபா உதவியாக அளித்தது. இவ்வருடமுடி வில் சுமார் 1500 ஏக்கர் நிலத்தில் அறுவடை செய் யப்படுமென எதிர்பார்க்கப்படுவதோடு தற்பொழுது கைவசமிருக்கும் அபிவிருத்தி வேலேகளேச் செய்ய அரசாங்கம் 1½ இலட்ச ரூபாவைச் செலவழிக்க தீர்மானித்துள்ளது.

அத்துடன் அரசாங்கம் முத்துராஜவலேத் திட்டத் திற்கு அருகிலும் சுற்றுடலிலும் உள்ள தனிப்பட்ட வர்களுக்குச் சொந்தமான பண்படுத்தப்படாத விசா லமான சதுப்பு நிலப்பிரதேசத்தை வாங்குவதற் கான வழிவகைகளே ஆராய்ந்து வருகிறது. உத் தேசிக்கப்பட்ட செலவுமதிப்பீட்டின்படி மேலதிகமாக 1500 ஏக்கர் காணியை அரசாங்கம் வாங்கும்.

## கதிரை யாத்திரை

(19 ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே சமையமையா எம்மை
ஈடேற்றுவாய் மோட்ச வீடேற்றுவாய்
தொண்டர்களிப் படித்துதிக்க வேலர்
துலங்கும் யானேயின்மேற் பவனி சென்று
செண்டுமுலே வேல்விழியாள் வள்ளி
சேருஞ்சந் நிதிமுன்னே சென்றுநிற்பக்
குப்பாயந் தன்னேமூடிக் கற்பகனர்
கூறும் பரம்பொருளேச் சிரசில் வைத்தே
அப்பா முருகனேயென்று வள்ளி
ஆத்தா ளமருங்கோவி லுள்ளேசென்று
அம்மைதன்பங் கினில்வைத்தார் பின்னல்
அங்கே நடந்ததைநா னறைவேன்கேளும்
துய்ய வள்ளிக் கிழங்குகளுங் கானில்
தோற்றுஞ்செந் தேனுடன் தினேமாவும்
படைத்தார் தூபமிட்டார் நல்ல
பாங்கான வஞ்சடுக்குத் தீபங்காட்டினர்
எடுத்தார்கர்ப் பூரதீபம் அதனே
எல்லோருங் கண்டுபணிந் தேத்திக்கொண்டார்
கர்ப்பூர வெளிச்சத்துடன் உள்ளே
கற்பகனர் செப்பரிய மெய்ப்பொருளினே
நற்சிரசில் வைத்து மூடி அங்கே
நண்ணுகின்ற யானே மேல் துண்ணனெவைத்து
மீண்டார் பாடிமுன்வந்தார் எங்கள்
வேலவரைக் கொண்டுசந் நிதிக்குட்சென்றர்
தூண்டுமெய் யன்பினேடும் போய் மேலாந்
துய்யனே அய்யனே மெய்யனேயென்று
இருத்தினு ராசனத்தில் கற்பகனர்
எல்லோருங் காணவெளி நண்ணினரே
கருத்துடன் மூவைந்துநாள் விழாவணி
கண்டுதரி சித்துமனங் கொண்டுமகிழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு மாசப் பெயர்கள்

தமிழில் வழங்கும் தை மாசி பங்குனி சித்திரை வைகாசி ஆனி ஆடி ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி என்னும்மாசப்பெயர்கள்பன்னிரண்டும் வடசொற்களோ தமிழ்ச்சொற்களோவென வாராயுமிடத்து, அவை வடசொற்களாகவேதோன்றுகின்றன. தை யென்பது தைஷ்ய என்பதன் திரிபு திஷ்யசம்பந்தம் தைஷ்ய என்பது. திஷ்ய என்பது பூசம். பூசமாசமென்பது தை. மாசி என்பது மாகி. என்பதன் திரிபு. மகசம்பந்தமுடையது மாகி. பங்குனி என்பது பல்குனி என்பதன் விகாரம். சித்திரை என்பது சித்திரா என்பதன் திரிபு. வைகாசி என்பது வைசாகி என்பதன் திரிபு. ஆனி என்பது ஆக்நீய என்பதன் சிதைவு ஆடி என்பது ஆஷாடமென்பதன் சிதைவு. ஆவணி என்பது சிராவணம் என்பதன் சிதைவு. புரட்டாசி என்பது பூர்வபாத்திரபதம் என்பதன் சிதைவு, ஐப்பசி என்பது ஆஸ்வீஜ என்பதன் சிதைவு. கார்த்திகை என்பது கிருத்திகா என்பதன் திரிபு. மார்கழி என்பது மார்க்கசீர்ஷம் என்பதன் சிதைவு. எனவே பன்னிருமாசப் பெயர்களும் வடசொற்களேயாம்.

இம்மாசப் பெயர்கள் தமிழில் வந்து வழங்குமுன்னே அவை தமிழிலிலே எப்பெயரால் வழங்கப்பட்டனவென வாராய்வாம். மாசமென்னும் பொதுப்பெயர் தமிழிலே திங்களென்னும் சொல்லால் வழங்கிவருதலின் மாசச்சிறப்புப் பெயர்களுந் தமிழிலுள்ளனவாதல் வேண்டும். எந்தெந்த நக்ஷத்திரத்திற்குப் பூரணைவருமோ அந்தந்த நக்ஷத்திரப் பெயரையே மாசங்கள் தமக்குச் சிறப்புப்பெயராகக் கொண்டன. மாசம் என்பதன் பொருள் அளவு. அது காலஅளவுக்கு ஆகுபெயர். அதுவும் சௌரமாசம் சாந்திரமாசம் சாவனமாசம் நக்ஷத்திரமாசம் பார்ஹஸ்பத்தியமாசம் என ஐவகைப்படும். அவற்றுள் சந்திரனைக் கருவியாகக் கொண்டளக்கப்படுவதாகிய சாந்திர மாசமே இங்கே பேசப்படுவதாம்.

பூசநக்ஷத்திரத்திற் பூரணை வரும் மாசத்தைப் பூசமாசமென்பது வடமொழி வழக்கு. அம்மாசத்தைப் பூர்வத்திலே தமிழில் எவ்வாறு வழங்கினாரென்பதே இங்காராய்ச்சி. பூசத்தின்பெயர் நான்கு. அவை குருவினாள், கொடிறு, வண்டு, காற்குளம் என்பன. குருவினாள் என்பது வடமொழிக் கலப்பாயிருத்தலின் அதனையொழித்துளஞ்சிய மூன்றுந் தமிழ்ச்சொற்களாம். அவற்றுள் ஒன்றினாலேயே அம்மாசத்தைப் பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் வழங்கினாராகற்பாலர். அஃதாவது கொடிற்றுத் திங்கள் வண்டுத்திங்களென வழங்கினாராகற்பாலர்.

அமரத்திலே பூசத்தின் பெயர்களாக வருவன சித்தியதிஷ்யநாமங்களிரண்டேயாம். சமஸ்கிருத அகராதிகளிலே குருவென்னும் பெயரும் அதற்குரியதாகச் சொல்லப்படுகின்றது. சித்தியம் சித்தியைத்தருவதெனவும் திஷ்யம் மகிழ்ச்சியைத் தருவதெனவும் பொருள் தருதலால் கொடிறு வண்டு காற்குளம் என்னும் பெயர்கள் அவற்றின் மொழிப்பெயர்ப்பாகாவாம். கொடிறு முதலிய மூன்றும் அந்நக்ஷத்திரம் தமக்குத்தோன்றிய வடிவம்பற்றித் தமிழ்நிலத்து நன்மக்களாலிடப்பட்ட பெயராகற்பாலன. கொடிறு என்பது கதுப்புப்பல். அதுபோலும் வடிவினையுடைமையால் பூசம் கொடிறெனப்பட்டது. அது வண்டுபோலுதலின் வண்டெனவும் கால்வாயுடைய குளம்போலுதலின் காற்குளமெனப்பட்டது. வரருசியார் வடமொழியிற் கூறியதைப் "பூசம் புடோலம்பூவது போலும்" எனப் பிற்காலத்தார் மொழிபெயர்த்துக் கூறுதலை நோக்குமிடத்துக் கொடிற்றுப்பல் வண்டு காற்குளம் புடோலம்பூ என்பன சற்றேறக்குறையத் தம்முள் ஒத்தவடிவினவென்பது நன்குதுணியப்படும். வடநாட்டிலிருந்து நோக்கிய வரருசியார்க்குப் பூசம் புடோலம்பூப் போலவும் தென்னாட்டிலிருந்து நோக்கிய தமிழ்மாந்தர்க்குக் கொடிறுபோலவும் வண்டு போலவும் காற்குளம் போலவும் தோன்றிற்றாதலின் தாந்தாங்கொண்ட குறிப்பையே அதற்குக் குறியாக்கினார்கள். அதுபற்றியே இருவர் குறிவழக்கும் வேறாயின.

மகத்தோடு கூடிய பூரணைமாசம் மாசியெனப்பட்டது. மகத்தின் பெயர்கள் கொடுநுகம், வேள்வி, வாய்க்கால், வேட்டுவன், மாசி, முதல்வருஞ் சனி என்பன. அவற்றுள் கொடுநுகம், வாய்க்கால், வேட்டுவன் என்பன அதன் வடிவுபற்றியிட்ட தமிழ்ப் பெயர்கள். வேள்வி என்பது மகம் என்பதன் மொழிபெயர்ப்பு. மாசி என்பது மாகி என்பதன் திரிபு. முதல்வருஞ்சனி என்பது வடமொழி கலந்த பெயர். முடநுகம் வாய்க்கால் வேட்டுவன் என்னும் பொருள்படவரும் வடமொழிப் பெயர் அமரமுதலிய நூல்களிற் காண்கிலம். ஆதலின் அவை தமிழ்நிலத்துவழக்கெனவே துணியற்பாலன. அவற்றுள் ஒன்றினாலேயே அம்மாசம் பூர்வத்தில் வழங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகற்பாலது. வரருசியார் மகம் ஆந்தோளிகாரூப முடைய தென்பர். அஃதாவது தண்டிகை போன்ற தென்பர். தமிழ் நூலோர் மகத்தைக் கொடுநுகம் போன்றதென்பர். இருவர் நிலமும் வேறுதலின் தத்தம் நிலத்துள்ள ஒப்புடைப்பொருள்காட்டி அதற்கு வடிவு கூறினராதலின் இருவழக்கும் ஒன்றற் கொன்று சம்பந்தமில்லா வழக்காம். ஆதலின், கொடுநுகமென்பது தமிழ்நிலத்திற் பிறந்தபொருளுஞ் சொல்லுமாம். வாய்க்கால் என்பது வளைவு பற்றி வந்த உவமைப்பெயர். வேட்டுவன் என்பது வில்வடிவுபற்றிவந்த உவமைப்பெயர்.

உத்தரத்தோடு கூடியபுரணைமர்சம் பங்குனியெனப் பட்டது. பல்குனமென்பது உத்தரத்தின் பெயராதலின் அதுசம்பந்த மாசம் பங்குனியெனப்பட்டது. வசந்த காலத்தையுடையதென்பது அதன் பொருள். பல்குனம்–வசந்தகாலம். தமிழ் நிகண்டிலே வரும் உத்தரத்தின் பெயர்கள், பங்குனி கடையெழுஞ்சனி செங்கதிர்நாள் என்று மூன்றுமாம். அவற்றுட் பங்குனி வடசொல். கடையெழுஞ்சனி வடசொற்கலந்த பெயர். செங்கதிர்நாளொன்றுமே தமிழ்ச்சொல். சூரியன் பிறந்த நாளாதலிற் செங்கதிர்நாளென்ப. ஆதலின், பூர்வத்திற் பங்குனி செங்கதிர்த்திங்களென்னும் பெயரினலே வழங்கியதாகற்பாலது.

சித்திரையின் பெயர்கள் நெய், பயறு, மீன்' அறுவை, ஆடை, தூசு நடுநாள் தச்சன், துவட்டா நாள் என்பன. நெய் என்பது நெய்த்துளி; அது போலுதலின் சித்திரை நெய் எனப்பட்டது. பயறு போலுதலின் அது பயறென்னும் பெயர் பெற்றது.

மீன் போலுதலின் மீனெனப்பட்டது. அறுவை என்பது வஸ்திரம்; அதன் துவாரம்போற் சிறிதாய் விளங்குதலின் சித்திரை அறுவை யெனப் பட்டது. ஆடை தூசு என்பனவும் அப்பொருள் பற்றி வந்தபெயர்களாம். இருபத்தேழு நக்ஷத்திரங்களுக்குஞ் சித்திரை நடுநிற்றலின் நடுநாளெனப் பட்டது. தச்சனுகிய துவட்டா பிறந்த நாளாதலின் சித்திரை தச்சன் எனப்பட்டது. துவட்டாநாளென்பதின் பொருளுமதுவே. "சித்திரையிருமீன் சிறுபுலிக்கணபோல்" என்பது நக்ஷத்திரமாலை. வரருசியார் சித்திரையை முத்துக்குவமிப்பர். வடமொழியிராகுவமிசம் சித்திரைக்கு இமத்துளியை இணைகூறும். நெய்த்துளி, பயறு மீன் வஸ்திர இழைத் துவாரம், முத்து, புலிக்கள், பனித்துளி இவையெல்லாம் சிறுமையும் பிரகாசமுங் குறித்து ஒத்த கருத்தினவாதல் காண்க. தச்சன் துவட்டாநாள் என்னும் இரண்டும் வடமொழிச்சம்பந்தமாக, எஞ்சிய ஏழும் தமிழ்ப்பெயர்களாம். பூர்வத்திலே சித்திரைக்குத் தமிழ்விட்டு வழங்கியபெயர் இவற்றுளொன்றுயிருத்தல்வேண்டும்.

வைகாசி:—விசாகத்தின் பெயர்கள் முற்றில், வைகாசி, காற்றுநாள், முறம், சுளகு, சேட்டை என ஆறும். வைகாசி என்பது வடமொழியாகிய வைசாகி என்பதன் திரிபு. முற்றில், காற்றுநாள், முறம், சுளகு என்பன தமிழ்ச்சொற்கள். சேட்டை என்பது சேஷ்டா என்னும் வடமொழித் திரிபு; அசைவென்பது அதன்பொருள். காற்றின் அசைவு பெரிதுமுடையதென்பது கருத்து. விசாகமென்பது காந்திவியாபகமுடையதெனப் பொருள்படும். விசாகத்துக்கு வடமொழிநிகண்டிலே ராதாவென வொருபெயரேயுளது; அதன் பொருள் சித்தியைத்தருவதென்பது. முற்றில், காற்றுநாள், முறம், சுளகு என்னும் பொருள்பட விசாகத்திற்கு வடமொழிக் கண்வரும் பெயர்களைக் காண்கின்றிலம். முற்றில், காற்றுநாள், முறம், சுளகு என்பன ஒருபொருட் சொற்கள்; அவை மூன்றும் வடிவும் தொழிலும் பற்றி வந்த பெயர்கள். நக்ஷத்திரமாலையும் "விசாக மாறு விடிபாழ்ந்துவரவாம்" எனக் கூறும். இடிபாழ்ந்துரவும் முறமும் தம்முள் ஒத்தவடிவுடையனவாதல் ஒப்புநோக்குமிடத்துப் புலனும். விசாகத்தோடுகூடிய பூரணைமாசம் வைகாசி. அது, வடமொழி தமிழில் வந்து வழங்கியகாலத்திலே தொடங்கிய வழக்கு. அதற்கு முன்னர் வைகாசிக்குத் தமிழரிட்டு வழங்கிய பெயர் முற்றில் காற்றுநாள் முறம் சுளகு என்பனவற்றுள் ஒன்றினல் முற்றிற்றிங்கள் காற்றுத்திங்கள் முறத்திங்கள் சுளகுத்திங்களென வழங்கினராதல் வேண்டும்.

முன்னே மகம் உத்தரம் என்னு நக்ஷத்திரங்களின் பெயர்களுள்ளே முதலெழுஞ் சனி கடையெழுஞ்சனி என்பனவற்றிற்குக் காரணங்கூருது விட்டேம். அதணைக்கூறி மேற்செல்வோம். மூலத்திரிகோணங்காணுதற்கு மகமே முதல் நக்ஷத்திரமாக வெடுத்துக்கொள்ளப்படுவது. அதற்கடுத்தது பூரம். அதற்கடுத்தது உத்தரம். இப்படி யெடுத்துக்கொள்ளப்படும். அச்சுவினி மகம்மூலம். பரணி பூரம் பூராடம் கார்த்திகை உத்தரம் உத்தராடம் என வரும். முதலெழுஞ்சனி என்பதிற் சனி என்பதன் பொருள் கோணம். ஆகவே முதலெழுஞ்சனி என்பதன் பொருள் முதல்வருங் கோணத்திற்குரிய நக்ஷத்திரமென்பதாம். அது மகமாதலின் அப்பெயர் பெறுவதாயிற்று. அடுத்த கோணத்திற் குரியது பூரமாதலின் அஃது இடையெழுஞ்சனி என்னும் பெயர் பெறுவதாயிற்று. அதற்கடுத்

ததும் அவ்விராசிக்குக் கடையிலுள்ளதுமாகிய கோண த்துக்குரிய நக்ஷத்திரம் உத்தரமாதலின் அது கடையெழுஞ்சனி எனப்படும். சனி என்பது வடமொழி "ஸநீ" என்பதன் தற்பவம். அதன்பொருள் கோணம்.

ஆனிமாசம்:—ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்தோடு பூரணை வரு மாசம் ஆனி யெனப்படும். ஜ்யேஷ்டா என்பது தமிழிலே கேட்டையெனத்திரிந்து வழங்குகின்றது. கேட்டையின் பெயர்கள் சேட்டை, இந்திரனுள், வேதி, தழல், எரி, வல்லாரை என்பன. அவற்றுள், சேட்டை என்பது ஜ்யேஷ்டா என்னும் வடமொழியினதுதிரிபு. இந்திரன் பிறந்தநாளாதலின் அஃது இந்திரனுள் எனப்பட்டது. வேதி என்பது யாககுண்டம்; அதுபோலுதலின் வேதி எனப்பட்டது. தழல் என்பது அக்கினிப்பிழம்பு. அதுபோலுதலின் அப்பெயர்பெற்றது. எரி என்பது சுடர்; அது போலுதலின் எரி எனப்பட்டது. வல்லாரை என்பது வல்லாரையிலை. அதுபோலுதலின் அப்பெயர் கொண்டது. வேதி முதலிய மூன்றும் வடிவுங்குணமும் பற்றிவந்த பெயர்கள். வல்லாரை வடிவுபற்றி வந்த பெயர். நக்ஷத்திரமாலையும் "கேட்டை நான்கு மீட்டி போலும்" எனக்கூறும். வல்லாரையிலை வடிவத்தால் ஈட்டியையொத்ததேயாம்.

ஜ்யேஷ்டா மாசத்துக்கு வடமொழி நிகண்டில் வரும் பெயர் "சுக்கிர" வென்பதொன்றுமே. அது "பிராணிகளைத் தவிக்கச்செய்வது" எனப் பொருள் தரும். அக்கருத்தைப்பற்றி உஷ்ணாதிகாரமுடைய மாசமென்னும் பொருள்பட ஆக்னீயமாச மென்பதும் அதற்கோரபிதானமாயிற்று. ஆக்னீயமென்பது தமிழில் ஆனியென்ருயிற்று. எரி, தழல், வேதி என்பனவும் அக்கருத்தேபற்றி வந்தன. சேட்டை இந்திரனுள் வேதி மூன்றும் வடசொற்கள். எரி, தழல், வல்லாரை மூன்றும் தமிழ்ச் சொற்கள். ஆனி என்னும் பெயர்வழக்கு வருமுன்னே தமிழில் அம்மாசத்துக்கு வழங்கிய பெயர்கள் எரி, தழல், வல்லாரை என்பனவற்றுள் ஒன்ருதல் வேண்டும்.

ஆடிமாசம்:—ஆஷாடி என்பது தமிழில் ஆடியென வந்தது. ஆஷாடி என்பது ஆடிப்பூரணை. ஆஷாடமென்பது பூராடம், உத்தராடம் இரண்டற்கும் பொதுப்பெயர். பூராடம் பூர்வாஷாடம் என்பதன் திரிபு. உத்தராடம் உத்தராஷாடம் என்பதன் திரிபு. ஆஷாடத்திற் பூரணைவருமாசம் ஆடி எனப்படும். ஆஷாடத்திற்கு வடமொழிநிகண்டில் வரும் பெயர் சுசி என்பதொன்றுமே. சுசிக்கலாற்ருத கொடியவுஷ்ணத்தையுடையதென்பது அதன் பொருள். தமிழிலே பூராடவுத்தராடங்களின் பெயர்கள் உடைகுளம், முற்குளம், நீர்நாள்; கடைக்குளம் ஆனி, விச்சுவநாள், ஆடி என்பன. அவற்றுள் முன்னைய மூன்றும் பூராடப்பெயர்கள். பின்னைய நான்கும் உத்தராடப் பெயர்கள். உடைகுளம் போலுதலின் உடைகுளம். பூராடமும் உத்தராடமும் முன்னும் பின்னுமாக இருகுளம்போற் கிடத்தலின் முன்னுள்ள பூராடம் முற்குளமெனவும் பின்னுள்ள உத்தராடம் கடைக்குளமெனவும் பட்டன. நீர்நாள் நீரை அதிகரித்து நிற்குநாள் எனப் பொருள்படும். வராகமிகிரரும் ஆஷாடத்துக்கு அதிகார ஸ்தானமாகக் கிணறு முதலிய நீர்நிலைகளைக் கூறுவர். விச்சுவநாள் விச்சுவ தவருக்குரிய நாள். ஆனி என்பது எல்லை. சூரியன் வியாபிக்குந் திக்கெல்லையென்பது கருத்து. ஆஷாடமென்பதின் பொருளுமதுவே. உடைகுளம் முற்குளம் கடைக்குளம் என்பன வடமொழிச்சம்பந்தமுங் கருத்துஞ் சிறிதுங் கலவாத செந்தமிழ் நிலத்து வழக்காதலின் அவற்றுள் ஒன்றினலேயே, ஆடி யென்னும் பெயர்வந்து வழங்குமுன்னர், அம்மாசம் வழங்கப்பட்டதாதல் வேண்டும்.

ஆவணி:—சிரவண நட்சத்திரத்தோடுகூடியபூரணை மாசம் ஆவணி. சிராவணி என்பது ஆவணி எனத் தமிழில் வந்தது. சிரவணமென்பது தமிழிலே திருவோணமென வழங்கும். திருவோணத்தின் பெயர்கள் மாயோனுள், உலக்கை, முக்கோல், சிரவணம், சோணை என்பன. இவற்றுள் மாயோனுள், சிரவணம், சோணை என்பன மூன்றும் வடமொழிப்பதங்கள். உலக்கை முக்கோல் என்னுமிரண்டும் தமிழ்ச் சொற்கள். மாயோனுள் என்பது மாயவனுக்குரிய தினமெனப் பொருள்படும். சிரவணமென்பது மழைப்பெயலுடையநாளெனப்பொருள்படும். சிரவணம்–பெயல். சரோணவென்பது தமிழிலே சோணையென வந்தது. அதன் பொருள் கூட்டம். மேகக்கூட்டமுண்டாகு நாளென்பது கருத்து. உலக்கைபோலுதலின் உலக்கையெனப்பட்டது. "ஓணமூன்று முலக்கைபோலும்" என்ருர் நட்சத்திரமாலை நூல் செய்தாரும். முக்கோல் போலுதலின் முக்கோலெனப்பட்டது. முக்கோலென்பது திரிதண்டு. அஃதாவது அடுக்கி ஒரு சேரத் தலையிடைகடை மூன்றிடத்துங் கட்டிய மூன்று கோல்கள். அது சந்நியாசமுத்திரை. மனம் வாக்குக் காயமென்னு மூன்றையுமடக்கியாளுதல் சந்நியாசத்துக்கு இன்றியமையாவிலக்கணமாதலின் அதன் அறிகுறியாகச் சந்நியாசிகள் திரிதண்டுதரிப்பர். திரிதண்டின் தலையிடை கடை மூன்றிடத்துமுள்ள பூண்போலத் திருவோணநட்சத்திர மூன்றும்விளங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதலின் அஃதப்பெயர் பெறுவதாயிற்று. வடமொழிமக்கள் திருவோணத்துக்குத் திரிதண்டை உவமிக்கத், தென்மொழிமக்கள் தமது நிலத்தில் அதற்கு உவமையாகக்கண்டது உலக்கையேயாம். ஆகவே முக்கோலென்பது தமிழ்ச் சொல்லேயாயினும் வடசொல்லாகிய திரிதண்டின் மொழிபெயர்ப்பாதலின் உலக்கை யொன்றுமே பூர்வத்திலே தமிழ் மக்கள் திருவோணத்துக்கு இட்டுவழங்கிய பெயராம். ஆதலால் ஆவணிக்கு அந்நாள் அவரிட்டு வழங்கிய பெயர் உலக்கைத் திங்களென்பதே போலும்.

(செந்தமிழ்)

## சிம்மாசனப் பிரசங்கம்

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடும் சபையின் அறிக்கை தயாராகிவிட்டது. எனது அரசாங்கம் அதனைப் பரிசீலனை செய்தபின்னர், உங்கள் முன்பு அது சமர்ப்பிக்கப்படும். இத்திட்டத்தை ஒழுங்காக நடைமுறைக்குக் கொண்டுவருவதால், நாடு அபிவிருத்தி யடைவதுடன் வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கிவிடும்.

**சபாநாயகர் அவர்களே! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே!**

அடுத்த நிதி வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும். இது சமர்ப்பிக்கப்பட்டதும், அவ்வருடத்திற்கு எனது அரசாங்கம் உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டத்தையும் வேலை விவரங்களையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இந்த உத்தேசத் திட்டங்கள் மேலதிக பொருளாதார விருத்திக்கும், வீடமைப்பு உட்பட சமூகசேவை விருத்திக்கும் இடமளிக்கின்றன. இன்னும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்கவும் உதவியாகவிருக்கும்.

**தலைவர் அவர்களே! செனெற்றுச்சபை அங்கத்தினர்களே! சபாநாயகர் அவர்களே! பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களே!**

புதிய வரிவிதிப்பு அமைப்பினை அடக்கியுள்ள மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு சட்டப் பிரமாணங்களாகி அமுல் நடாத்தப்பட்டு வருகின்றன. அறநிலையங்களின் வருமானத்தில் வரிவிதித்தல் சம்பந்தமான வருமான வரிச் சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டு சட்டப்பிரமாணமாகிவிட்டது.

சில அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளைக்குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்விஷயத்திலும் வாழ்க்கைச் செலவைப் பாதிக்கும் இதர விஷயங்களிலும் நடவடிக்கைகள் மேலும் எடுக்கப்படும்.

தெருப் போக்குவரவு, கப்பற்சரக்கு ஏற்றியிறக்கல் ஆகிய தேசியமயமாக்கப்பட்ட சேவைகள் முறையே இலங்கைப் போக்குவரவுச் சபையாலும், துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனத்தாலும் நடாத்தப்படுகின்றன. திருத்தஞ் செய்யவேண்டிய குறைபாடுகள் இன்னும் உண்டு என்பதை ஏற்றுகொண்ட போதிலும், எனது அரசாங்கம் இவ்விரு துறைகளிலும் திறமைவாய்ந்த சேவையை அளிக்கத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்.

எனது அரசாங்கத்தின் சோஷலிஸக் கொள்கைப் படி, இன்னும் வேறு எவற்றை நற்பயனளிக்கத்தக்க முறையிலும் விவேகமாகவும் தேசியமயமாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை அது ஆலோசனை செய்யும். இவ்விஷயம் சம்பந்தமாக பொதுமக்கள் மனதில் எழுந்துள்ள தடுமாற்றத்தை அகற்றும் பொருட்டு, தன்முயற்சி நிலைமை என்ன? பொது முயற்சி நிலைமை என்ன? என்பதுபற்றி அவசியமான விடத்து, எனது அரசாங்கம் மேலும் தெளிவுபடுத்திக் காட்டும்.

வித்யோதய, வித்யாலங்கார பிரிவேனுக்களுக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து அளிப்பதற்கான மசோதா நிறைவேற்றப்பட்டு சட்டமாகியுள்ளது. இந்தப் பல்கலைக் கழகங்கள் இப்பொழுது அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தை ஒத்திவைத்ததால் காலாவதியான வாடகைக் கட்டுப்பாட்டுத் திருத்த மசோதாவும் பயிர் இன்சூரன்ஸ் மசோதாவும் மீண்டும் விரைவிற் சமர்ப்பிக்கப்படும். பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டதால் காலாவதியான பிற மசோதாக்களும் மீண்டும் இக்கூட்டக்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். கூட்டுறவு விருத்தி வங்கி மசோதா, தொழிலாளர்களுக்கு மேலும் பாதுகாப்பளிப்பதற்கான மசோதா, தொழிலாளர் நஷ்ட ஈடு சம்பந்தமாக அரசாங்க இன்சூரன்ஸ் செய்வதற்கான மசோதா, காணியுரிமைப் பதிவு மசோதா ஆகியவை உட்பட எனது அரசாங்கத்தாற் கவனிக்கப்பட்டுவந்த பல மசோதாக்கள் உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும்.

மேற் கூறிய எல்லா விஷயங்களையும் உங்கள் ஆலோசனைக்கு விடுகிறேன். இவற்றை நீங்கள் கவனமாகப் பரிசீலனை செய்வீர்கள் என நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலைச் செய்கை

(திரு. ச. சிதம்பரம்பிள்ளை அவர்கள்)

இலங்கையின் வறண்ட, ஈர வலயங்களில் சிற சில இடங்களில் பணவருவாயின் பொருட்டு வெற்றிலை உண்டு பண்ணப்படுகின்றது. வறண்ட பிரதேசத்தில் வடமாகாணத்திலேயே இப்பயிர் பெரும்பாலும் சாகுபடி செய்யப்படுவதனால் அம்மாகாணத்தில் கையாளப்படும் செய்கை முறைகள் இக் கட்டுரையில் விளக்கப்படுகின்றன.

காற்றொதுக்கும் போதிய நிழலும் வசதியான இடங்களிலேயே வெற்றிலை நன்கு விருத்தியடைகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு, மேற்குப் பிரிவுகளிற் சாதாரணமாகக் காணப்படும் செந்நிறமும் கபில நிறமும் செறிந்த சுண்ணக் கற்களிமண்ணும் மன்னார் மாவட்டத்திற் காணப்படும் நரை இருவாட்டி மண்ணுமே இப்பயிருக்கு மிக வாய்த்தனவாகும். இதற்கு உகந்த மண்ணுள்ள இடங்களில் காற்று வேகமாக வீசுவது இயல்பானால் அவ்விடங்களிலே காற்றொதுக்கு வலயங்கள் அமைத்தல் அவசியமாகும். வெற்றிலைத் தோட்டத்தைச் சுற்றி 10—15 அடிகள் இடைவெளி விட்டு வாழை மரங்களும் அவற்றிற்கிடையில் கரும்பும் நாட்டுவதால் திருப்திகரமான காற்றொதுக்கு வலயத்தை அமைத்துக் கொள்ளலாம். இதனால் பண வருவாயும் அதிகரிக்கும். வெற்றிலைக் கொடியிலிருந்து வருமானம் பெறும் வரையும் அதன் பின்னரும் மேற்கண்ட பயிர்கள் வெற்றிலைக் கொழுந்துச் செய்கையாளருக்கு மதிக்கக்கூடிய அளவுக்கு வருமானம் அளிக்கும். கார்த்திகை மாதத்தில் வாழையடி மண்ணைக் கொத்திவிடுதலும் வெற்றிலைக் கொடிக்கு நீர்ப் பாய்ச்சுங் காலங்களில் வாழைக்கு நீர் இறைத்தலும் வழக்கமாகும்.

வெற்றிலைக்கொடி படர்தற்கு ஆதாரமாக நாட்டப்படும் நிரந்தர உயிர்க்கொழு கொம்புகளும் ஓர் அளவுக்குக் காற்றொதுக்கு மரங்களாகவே விளங்குகின்றன. காற்று அதிகம் வீசுங் காலங்களில் தோட்டத்தின் வேலியை உயர்த்திப் பனையோலையால் அடைத்தல் வழக்கமாகும். இதற்குப் பதிலாக முள் முருக்கு அல்லது கலியாண முருக்கு மரத்தை (எரித்திரினா இண்டிக்கா) உயிர்க் கதியாலாக வேலியில் நாட்டி வளர்த்தல் விரும்பத்தக்கதாகும். இதனால் தோட்டப் பொருளாக்கம் நிச்சயமாக அதிகரிக்கும். எவ்வண்ணமென்பதை இம் மரத்தின் உபயோகத்தை அறிந்து உணர்க.

## கொழுந்து நடுகை

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொதுவாக ஐப்பசி மாதந் தொடக்கம் மார்கழி மாதம் வரையும் சில இடங்களில் சித்திரை வைகாசி மாதங்களிலும், மன்னார் மாவட்டத்தில் மாசி, சித்திரை, ஆடி மாதங்களிலும் வெற்றிலைக் கொழுந்து நடுகை நடாத்தப்படுகின்றது. நடுகைக்கு 2, 3 மாதங்களுக்கு முன்னர் தரை பண்படுத்தப்படுகின்றது.

முதலில் குப்பைகூளங்களை நிலத்திலெரித்து மண்ணிலுள்ள கிருமித்தொற்றை நீக்குதல் நலம். அதன் பின் தரையை உழுது, இடப்புடைத்து, மண்ணை நன்கு பண்படுத்துதல் வேண்டும். நீரிறைப்புக்கேற்ற முறையில் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. வலிகாமம் வடக்குப் பிரிவில் சிறிது பள்ளமான பாத்திகள், ஒவ்வொன்றும் 5½ அடி நீளமும் 3 அடி அகலமும் உடையதாயும், வலிகாமம் மேற்குப் பிரிவில், ஒவ்வொன்றும் 6 அடி நீளமும் 4½ அடி அகலமும் உடையதாயும், மன்னார் மாவட்டத்தில் பாத்திகளுக்கிடையில் 3 அடிகள் வெளியாகவிட்டு, ஒவ்வொன்றும் 2 அடி அகலமும் இடத்துக்கேற்ற நீளமும் உடையதாகவும் கட்டப்படுதல் வழக்கமாகும். மேற்கண்ட வடிவின பாத்திகளிலும் பார்க்க மட்டமான மேடைகள் அல்லது சிறிது உயர்ந்த பாத்திகள் விரும்பத்தக்கனவாகும். மேடைகளுக்கிடையில் நீளப்பாட்டுப் பக்கத்தில் வாய்க்கால்களை அமைக்கலாம். ஒரு மேடை இரண்டடியகலத்துக்கு மேற்படுதல் விரும்பத்தக்க தன்று. இவ்வண்ணம் மேடைகள் தயாரிக்கப்படும் போது தண்ணீர் வாய்க்காலில் மட்டும் ஓடவிடப்படும். அதிலிருந்து அது மேடை மண்ணில் ஊறிச் செறியும். வெற்றிலைக் கொடியானது அதன் ஆயுட்காலம் பூராவும், உயிர்க்கொழு கொம்பில் கட்டி வளர்க்கப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் சாதாரணமாக முள் முருக்கு இதற்கு உபயோகப் படுகின்றது. மன்னாரில் முருங்கை இத்தேவைக்காக நாட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொடிக்கு ஆதாரம்

முள்முருக்கைப்போலக் காற்றொதுக்கு மாமும் கப்பாத்துச் செய்யப்படக் கூடியதுமான அகத்தி இந்தியாவில் வெற்றிலைக் கொடிக்கு ஆதாரமாக நாட்டப்படுகின்றது. இது முள்முருக்கைப்போல் அதிகம் நிழல் அளிப்பதில்லை. அதனால் இதனை உபயோகிக்குமிடத்து வெற்றிலைப் புள்ளி, கருந்தடி நோய்கள் சம்பவித்தல் குறைவாகுமென்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். எனினும் பின்வரும் காரணங்களினால் முள்முருக்கு இலங்கையில் மிக விரும்பப் படுகின்றது :—

(1) அகத்தியைப்போல இதுவும் இருபுற வெடிகனிப் பயிர்க் குடும்பத்தைச் சார்ந்ததாகையால் வேர் முண்டுகள் மூலம் இதனாலும் காற்றிலுள்ள காலகத்தனிமத்தை மண்ணிற் சேர்க்கமுடியும்.

(2) கால்நடைகளுக்கு மிக உகந்த உணவாக முருக்கமிலை உபயோகமாகின்றது.

(3) முருக்கந் தடியிலுள்ள முட்களும் அவை கிளம்புமிடங்களில் தோன்றும் மிதந்த பட்டையும் இத்தடிகளில் வெற்றிலைக்கொடி தாவி எழுந்து வளர்தற்குத் துணையாயிருக்கின்றன.

தரையைப் பண்படுத்திப் பாத்திகள் கட்டியபின் 6—8 அடிகள் உயரமும் 4—6 அங்குல சுற்றளவுமுடைய முள்முருக்கந் தண்டுகள், பாத்தியின் நீளப்பாட்டு வரம்பில் ஓர் அடி தூரத்துக் கொவ்வொன்றாகவும் வாய்க்கால் விளிம்பில் பாத்திக்கு இவ்விரண்டாகவும் தண்டின் அடிப்பக்கம் சாய்த்து வெட்டப்பட்ட பின்னர் 8—12 அங்குல தாழ்ப்பத்தில் நிமிர்த்தி நாட்டப்படுகின்றன. முருக்கமர நடுகைக்குப்பின் மழையில்லாவிட்டால் தண்டுகளில் முளைகிளம்பி வளரும்வரை ஓர் அளவுக்கு நீர்ப்பாய்ச்சுதல் வேண்டும். தண்டு நுனியைப் பச்சைச் சாணியால் மூடுதலும் வழக்கமாகும். மரம் நாட்டப்படவேண்டிய இடங்களிலெங்கும் ஓரே தடவையில் நாட்டப் போதிய தண்டுகள் கிடைக்காப் பட்சத்தில் ஒன்றை விட்டொரு நிலையத்தில் நாட்டி காலியிடங்களை இரு மாதங்கள் முடிய முன்னர் நிரப்பலாம்.

### கீரையும் கிழங்கும்

பாத்திகளில் முளைக்கீரை விதைமணியை விதைத்து வெற்றிலைக் கொழுந்து நாட்டமுன்னர் கீரைப்பயிரைக் கொய்து உபயோகித்துக் கொள்ளலாம். வரம்பு மூட்டுகளில் சிறு கிழங்கு இராசவள்ளி, கரணைக் கிழங்கு முதலியனவும், நிரை வெளியில் குறுக்கு வரம்புகளின் மத்தியில் இடையிடையே கத்தரி, வாழை (பன்றி, கரு, கெற்பு) முதலிய பயிர்களும் சில தோட்டங்களில் நாட்டப்படுகின்றன. கிழங்குக் கொடி, முக்கியமாகச் சிறு கிழங்குக் கொடி முருக்க மரத்தை அதன் அடியிலிருந்து சுற்றிக் கிளம்பாவண்ணம், கொடியின் நுனியில் வாழை நார் கட்டி, நார் மார்க்கமாக கொடி சென்று மரத்தை 3—4 அடி உயரத்திற்றாவிப் பிடிக்கு மாறு மரத்தில் நார் மாட்டப்படுகின்றது. இதனால் கிழங்குக் கொடியால் இளம் வெற்றிலைக் கொழுந்துக்குப் பங்கமேற்படுதல் தவிர்க்கப்படுகின்றது. பொதுவாகக் கீரை, கத்தரி போன்ற பயிர்கள் வெற்றிலைக் கொழுந்தின் வளர்ச்சியுடன் முரண் படுவதில்லை. எனவே இவை போன்ற பயிர்களை உண்டுபண்ணுவதிற் குற்றமில்லை. ஆனால் வெற்றிலைத் தோட்டத்துள் மட்டம் அதிகம் பெயராத இனவாழை தானும் நாட்டப்படுதல் விரும்பத்தக்கதன்று. சாதாரணமாக, முதலில் சிறு கிழங்கை நாட்டிச் சித்திரை வைகாசி மாதங்களில் அதனைக் கிண்டியெடுத்துக் கொண்டு திரும்பவும் அவ்விடங்களில் இராச வள்ளி, கரணை முதலிய கிழங்குகளை நாட்டுதல் நலம்.

வெற்றிலைக்கொடி சாதாரணமாகக் கொழுந்து மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது. மழைகாலத்தில் கொழுந்துகள் நேரடியாகத் தோட்டத்தில் நாட்டப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் கையாளப்படும் நடுகை முறையில் மூன்று கணுக்களும் இலைகளுமுள்ள கொழுந்து நடுகைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அநேகமாக 1—3 வயதடைந்ததும் சௌக்கியம் பொருந்தியதுமான கொடிகளிலிருந்து கொழுந்து வெட்டியெடுக்கப் படுகின்றது. தாய் அல்லது மூலக் கொடியின் கொழுந்தே நடுகைக்கு வேண்டப்படுகின்றது. தேவையான கொழுந்து கிடைக்காப் பட்சத்தில் கணுக்களில் வேர்கள் கிளம்பியுள்ள இடைமுளைகளிலிருந்தும் நடுகைக்குக் கொழுந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றது. கொழுந்து வெட்டியெடுக்க விருக்கும் மூலக் கொடியும் இடைமுளையும் 1-1½ மாதங்களுக்கு முன்பதாகத் தலைப்புக் கிள்ளப்படுகின்றது. நடுகைக்குத் தேவையான போது 3—4½ மாதங்களுக்கு முன்னர் கப்பாத்துச் செய்த மட்டத்திலிருந்து கொழுந்துக்காக வளர்க்கப்பட்ட கொடியில் 2—3 இலைகளை விட்டு மேற்தண்டு முழுமையும் வெட்டியெடுக்கப்படுகின்றது. இடைமுளையின் அடியில் 1—2 அங்குலத் தண்டுவிட்டு வெட்டுதல் வழக்கமாகும். இவ்வண்ணம் வெட்டப்பட்ட தண்டுகளிலிருந்து 3 இலைகளைக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுந்துகள் அறுக்கப்படுகின்றன. இப்படிச் செய்யும் போது எஞ்சிவரும் ஒற்றை அல்லது இரணை இலைக் கொழுந்துகளையும் நடுகைக்கு உபயோகிக்கலாம்.

நாட்டுதற்கு முன்னர் கொழுந்து சுற்றிக் கட்டப்படுகின்றது. முதலில் கொழுந்தின் கீழ்இலை ஏறக்குறைய $\frac{1}{4}$ அங்குல நீளக் காம்பு தண்டுடன் விடப்பட்டுக் கிள்ளப்படுகின்றது. தண்டுக்கு நேரே மத்திய இலையை நிமிர்த்திப் பிடித்துக்கொண்டு, மேலிலையைக் குறுக்கே மடித்து அதன் உட்பக்கம் வெளியிலிருக்கும் நிலையில், தண்டைச் சுற்றி அதனைச் சுருட்டி, பனையோலைச் சார்க்கீற்றால் சுருள் மெதுவாகக் கட்டப்படுகின்றது.

**நாட்டும் முறை**

மண்ணைக் கிளறித் திரும்பவும் கட்டப்பட்ட பாத்தியில், வாய்க்கால் விளிம்பிலுள்ள முருக்க மரத்திலிருந்து 4—6 அங்குல தூரத்தில் ஒரே பக்கத்தில் மரத்தின் இரு கரைகளிலும் நடுகை நிலையங்களுக்கிடையில் 6—9 அங்குல வெளிவிட்டு, கம்பிப் பாரையால் அல்லது கமுகஞ் சலாகைக்குல்லானால் நிலத்திற் பொழியடித்து ஒவ்வொரு பொழியிலும் ஒவ்வொரு கொழுந்து அதன் மத்திய கணு அல்லது மொழிவரை நிலத்துட் புதையும் வண்ணம், நேராக நாட்டப்படுகின்றது. தண்டைச் சுற்றி மண்ணை இறுக்கி அமர்த்தலாகாது. வரம்பிலுள்ள மரம் ஒவ்வொன்றினடியிலும் அதன் இரு பக்கங்களிலுமுள்ள பாத்திகளில் ஒவ்வொன்றாகக் கொழுந்து நாட்டப்படுகின்றது. இதனால் வரம்பிலுள்ள மரம் ஒவ்வொன்றும் இரு கொடிகளுக்கு ஆதாரமாயிருக்கும். இவ்வண்ணம் நாட்டப்படும்போது ஒரு பரப்பில் (302 சதுர யார்) சுமார் 1000 கொழுந்துகள் நாட்டப்படலாம். வெயிற் காலத்தில் நாட்டப்படும்போது ஆவரை, பன்னை போன்ற குழைகளால் கொழுந்தை மூடி நிழலிடுதல் நலம். கொழுந்து முளைத்தபின் நிழல் தேவையில்லை.

கொழுந்தை நேராகத் தோட்டத்தில் நாட்டும் போது படுகை நிலையங்கள், முக்கியமாக நோய் பெரிதும் சம்பவிக்கும் மாரி காலத்தில் அதிகப்படும். சில சமயங்களில் முழுத் தோட்டத்திலும் திரும்பவும் கொழுந்து நாட்ட வேண்டிய நிலைமையும் உண்டாகின்றது. கோடை காலத்திலும் சரி, மாரி காலத்திலும் சரி கொழுந்தைப் பதிவைத்து நடுதல் நலம். வேர் எழுப்பப்பட்ட கொழுந்து சுருதியாக நடுகை நிலையத்தில் நிலைபெறுமாகையால் அது நோயினால் அதிகம் பாதிக்கப்படமாட்டாது.

பெட்டி மேடையில் தென்னம் பொச்சுத் தூசியை அல்லது நார்ப்பொடியைப் போட்டுக் கொழுந்தைப் பதிவைத்து, பெட்டியைத் துணியால் மூடி, தினமும் ஒருவேளை அல்லது இரு வேளைகளில் அதிக ஈரப்பதமுண்டாகும் வண்ணம் தண்ணீர் தெளித்து வேரும் முளையும், எழுப்பப்பட்ட பின்னர் கொழுந்தை எடுத்து நாட்டுதல் ஒரு நவீன முறையாகச் சிபார்சு செய்யப்படுகின்றது.

நடுகைத் தினத்திலிருந்து இரண்டு வாரங்கள் சென்றபின்னர் படுகை நிலையங்களில் புதுக் கொழுந்துகளை நாட்டவேண்டும். மூன்று வாரங்கள் சென்ற பின்னர் இலைச் சுருளை அவிழ்த்து, 3,4 நாட்களுக்குச் சூரிய வெப்பம் விழக்கூடியதாக விட்டபின்னர் திரும்பவும் இலையைச் சுருட்டிக் கட்டிக் கொள்ளலாம். இதனால் தண்டு தைரியமடையும்.

வெற்றிலைக் கொழுந்து நட்டு ஒரு மாதம் சென்ற பின்னர் ஒவ்வொரு கொழுந்துக்குப் பக்கத்திலும் ஒவ்வொரு தடியாக வெயிலில் காய்ந்த கொய்யா, நொச்சி, வடக்கத்தை நாயுருவி (பீநாறி) புல்லாந்தித் தடிகளை ஊன்றி வெற்றிலைக் கொழுந்துக் கொடிகளை அவற்றுடன் அணைத்துப் பனையோலை அடலியினால் அல்லது பனையோலைச் சார்க்கீற்றினால் கட்டப்படுதல் வழக்கமாகும். இளம் வெற்றிலைக் கொடிகள் 2 அடி உயரத்திற்கு வளர்ந்த பின்னர் நிரந்தரக் கொழு கொம்புடன் அணைத்துக் கட்டப்படுகின்றன. அப்போது உக்கிப், பழுதடையாத ஊன்று தடிகள், முக்கியமாக நொச்சி, கொய்யா ஆதியன பொறுக்கப்பட்டு அடுத்த ஆண்டுக்கு உபயோகித்தற்காகச் சேகரிக்கப்படுகின்றன.

நடு இலைக்கணுவிலிருந்து தோன்றும் முளை தைரியமானதாயின் அதுவும் மேல் இலைக்கணுவிற் தோன்றும் முளையுடன் வளரவிடப்படுதல் நலம். இவ்வண்ணம் இரு முளைகளை வளரவிட்டுச் சில மாதங்கள் சென்ற பின்னர் இவற்றுள் எது வலிமை குன்றியதோ அதனை ஒடித்து விடலாம். மண்ணுள் மறைந்த கணுவிலிருந்து தோன்றும் மண்ணிடை முளை ஒருபொழுதும் வளரவிடப்படுவதில்லை.

வலிகாமம் மேற்குப் பிரிவில் கையாளப்படும் முறையின்படி இளம் வெற்றிலைக் கொழுந்து 3—5 அடிகள் உயரத்துக்கு வளர்ந்த பின்னர் $1\frac{1}{2}$ அங்குல அகலமுள்ள பனஞ் சலாகைகள் உயிர்க்கொழுகொம்பாக நாட்டப்பட்டுள்ள முள்ளு முருக்குகளில் மாட்டப்படுகின்றன. சாதாரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology ...
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.......



எட்டு வரிசைச் சலாகைகள், கீழ்ப்பக்கத்தில் இவ்விரண்டடி இடை வெளிவிட்டும் மேற் பக்கத்தில் ஒவ்வொரு அடி இடைவெளிவிட்டும் மாட்டப்படுகின்றன. இதனுல் வெற்றிலைக் கொடி வளர்ந்து சுலபமாகப் படர்தற்கு வசதியுண்டா கின்றது. நிரந்தர உயிர்க் கொழுகொம்புகள் காலத்துக்குக் காலம் கப்பாத்து செய்யப்படு கின்றன. தோட்டத்தில் வசதியாயுள்ள காற் றெதுக்குத் தேவைக்கும் தக்கவாறு முள் முருக்கு மரங்களில் 2 அல்லது 3 கிளைகள் உயர்ந்து வளரவிடப்படுகின்றன. இக் கிளைகளி லுள்ள இலைகள் காலத்துக்குக் காலம் மாட்டுத் தீனியாகப் பிடுங்கப்படுகின்றன. ஒரு வருடம் சென்ற பின் கிளைகள் வெட்டப்பட்டுப் புதுத் தோட்டத்தில் கொழுகொம்பாக நாட்டப்படுகின்றன.

### நீர்ப்பாசனம்

வெற்றிலைக் கொழுந்து நட்டு முதல் 12 நாட் களிலும் தினமும் நீர் இறைத்தல் வேண்டும். அதன்பின் ஒன்றைவிட்டொரு நாள் இறைத்தல் போதுமானதாகும். துலாவினுல் நீர் இறைத்தல் தான் பழைய வழக்கமாகும். சாதாரணமாகத் துலா மிதித்தற்கு இருவரும் பட்டைபிடித்து இறைத்தற்கு ஒருவரும் தண்ணீர் மாறுதற்கு ஒருவருமாக நான்கு தொழிலாளர் தேவையாகும். இப்படியான கஷ்ட நீர் இறைப்பை ஒழிக்க முதலில் எற்று இறைப்பு முறை கையாளப்பட்டது. இதில் தண்ணீர்க் கூடை யையிழுக்கும் மாடுகள் முன் செல்வதும் பின் செல்வதுமாகக் கஷ்டப் படுகின்றன. இதற்குப் பின் னர் பல வாளிச் சூத்திரம் வந்தது. இதில் வேலை செய்யும் எருதுகள் கிணற்றைச் சுற்றிவர வேண்டி யிருக்கின்றன. இதற்கு ஒருபடி உயர்வாக இரணை வாளிச் சூத்திரம் உபயோகத்திற்கு வந்தது. இதனை இயக்குவதற்கும் எருதுகள் தேவையாகையால் இன்று பெற்றோல் எண்ணெயில் இயங்கும் நீர் எழுப்பி இயந்திரங்கள் (பம்ஸ்) உபயோகிக்கப்படு கின்றன. எவ்வழியில் நீர் இறைக்கப்பட்டாலும் அது தாய் வாய்க்கால் வழியோடி மடக்கு வாய்க் காலிற் சென்று, கைவாய்க்கால் மார்க்கமாக வெற்றிலைக் கொடிப் பாத்தியில் நிரம்பு கின்றது. தண்ணீர் கட்டுந் தொழிலாளர் 6-9 அங்குல நீளக் கமுகஞ்சலாகைக் குல்லானை அல்லது சிறு இரும்புக் குல்லானை உபயோ கித்துப் பாத்தியின் மடக்கைக் கிண்டி தண் ணீரை ஒவ்வொரு பாத்தியிலும் மறித்துக் கட்டுதல் வழக்கம். பாத்தியில் தண்ணீர் பாயும் போது பாத்தியிலுள்ள களைகளைப் பிடுங்குவதும் பாத்தியில் நீர் நன்கு செறிந்து இருக்கும் பொருட்டு மண்ணையிடையிடையே குல்லானுல் குற் றுவதும் தண்ணீர் கட்டுபவரின் தொழிலாகும். பள்ளமான பாத்திகளில் ஒன்றைவிட்டொரு நாள் தண்ணீர் கட்டுதலால் தண்ணீர் வீண் போகக்கூடும். வாய்க்கால் வழியாக நீர்ப்பாய்ச்சுதலையிட்டு ஆராய்ச்சி நடாத்துதல் அவசியமாகும்.

### பசளையிடுதல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 20 வண்டி வீதம் நன்கு உக்கிய மாட்டெரு வெற்றிலைத் தோட்டத்திற்கு இடப்படுகின்றது. மேற்கண்ட அளவுப் பசளை பின்வருமாறு மூன்று மாத்திரைகளில் இடப்படுதல் வழக்க மாகும் :—

(1) கொழுந்து நட்டு ஆறு மாதங்கள் சென்ற பின்னர் முதலாம் மாத்திரை.

(2) முதல் முறை பசளையிட்டு நான்கு மாதங் கள் சென்ற பின்னர் இரண்டாம் மாத்திரை.

(3) இரண்டாம் முறை பசளையிட்டு நான்கு மாதங் கள் சென்ற பின்னர் மூன்றும் மாத்திரை.

ஒவ்வொரு முறையும் பசளையிடப்படும்போது மண் ணைப் புல்லுச் சத்தகத்தால் கிண்டி பாத்திகள் புதுப்பிக்கப்படுகின்றன. பசளையிட்ட பின்னர் 2 நாட்கள் சென்று மூன்று நாட்களுக்கு அடுத் தடுத்து நீர்ப்பாய்ச்சி; பின்னர் வழமையாக இறைக்கும் முறையில் ஒன்றைவிட்டொரு நாள் நீர்ப்பாசனஞ் செய்தல் வழக்கமாகும்.

(தொடரும்)

---

## வரவு செலவுத் திட்ப் . . , . .

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

*தொன் ஒன்றுக்கு 245 ரூபாவாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதன் தற்போதைய ஏற்றுமதி வரி 185 ரூபாவாகும். தேங்காய் எண்ணெயின் ஏற்றுமதி வரியும் 135 ரூபாவிலிருந்து 185 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. துருவல் தேங்காயின் விலை 95 ரூபாவிலிருந்து 135 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுளது. இவற்றின் மூலம் அரசிறை வருமானம் 90 லட்சம் ரூபாவால் அதிகரிக்கும்.*

*புதிய வரிகளின் மூலமும் சாராய விலை உயர்வின் மூலமும் 320 லட்சம் ரூபாவால் நமது அரசிறை வருமானம் அதிகரிக்கும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆடிவேல் விழா நடைபெற்றபோது சம்மாங்கோட்டார் சுப்பிரமணிய சுவாமி கோயில் இரதம் ஊர்வலமாக வெள்ளவத்தைக்குச் செல்லும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No........

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|
| 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டம் | 0 45 | 0 10 |
| 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க, முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வக்புகள் சட்டம் | 0 85 | 0 20 |
| 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்கம், ஒத்துழைப்புச் சங்கங்களின் அமைப்பு முறையும் அதிகரிப்பையும் பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திரட்டித் திருத்துவதற்கான சட்டம் | 0 25 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கச் சட்டம் ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் | 0 40 | 0 20 |
| கிராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 148) - மறுபதிப்பு | 1 30 | 0 25 |
| 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்கம் கிராம சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் | 0 10 | 0 10 |
| 1953 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் | 0 35 | 0 15 |
| 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கச் சட்டம் கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் | 0 45 | 0 20 |
| 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டம் நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் | 1 10 | 0 20 |
| 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் | 1 50 | 0 20 |
| 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக விவாகரத்து (திருத்த)ச் சட்டம் | 0 10 | 0 10 |
| அத்தியாயம் 104 தத்துவப் பத்திரங்கள் | 0 20 | 0 10 |
| அத்தியாயம் 120— வியாபாரப் பெயர்கள் | 0 40 | 0 10 |
| 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் | 1 35 | 0 20 |
| 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் | 0 15 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் | 0 10 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம் - தாங்கள் செய்துவரும் வேலைக் கிரமத்திற் சேதமடையும் வேலையாட்களுக்கு நஷ்ட பூர்த்திப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம் | 0 35 | 0 20 |
| 1935 ம் ஆண்டில் ஏற்படுத்திய வேலையாட்கள் நஷ்ட பூர்த்தி விஷய ஒழுக்க விதிகள் | 0 35 | 0 20 |
| அத்தியாயம் 91— நொத்தாரிஸ்மார் (1938 ல் திருத்தியமைக்கப்பட்டது) | 1 30 | 0 35 |
| 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்— இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்தலுக்காகவும் பராதீனப்படுத்துதலுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கான சட்டம் | 0 55 | 0 35 |
| 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்கச் சட்டம் — ஊர்ச்சங்கங்கள் | 2 90 | 0 35 |
| 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம் - வேலையாட்கள் சம்பளச் சங்கச் சட்டம் | 0 50 | 0 20 |
| அத்தியாயம் 95, கலியாணப் பதிவுச் சட்டம் | 0 55 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க கலியாணப் பதிவுத் திருத்தச் சட்டம் | 0 50 | 0 10 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org